Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 69 சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 09ஆம் திகதி திங்கட்கிழமை
(26.09.2022) ஹிஜ்ரி 1444, ஸஃபர் - 29 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## சதொசவினால் திறைசேரிக்கு ரூ. 600 கோடி நட்டம்

02 பக்கம்

## குடும்பமொன்றுக்கு 14 ஆயிரம் ரூபா மறைமுக வரி

யோ.தர்மராஜ்

அரசாங்கத்தின் வரி சீர்திருத்தத்தினால் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள குடும்பமொன்று மாதமொன்றுக்கு 14 ஆயிரம் ரூபாவை மறைமுக வரியாக அரசாங்கத்துக்கு செலுத்துவதாக...

02 பக்கம்

# ஜெனீவா சமரில் பின்னடைவு!

## இலங்கைக்கு 11 நாடுகள் ஆதரவு

## கொழும்பை கைவிட்டது டில்லி



நமது விசேட நிருபர்

ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக 5 மேற்குலக நாடுகள் முன்வைத்த பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கைக்கு ஆதரவாக 11 வாக்குகள் கிடைக்கப்பெறுமென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவும் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்காதென அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

அத்துடன், இலங்கைக்கு எதிராக 22 தொடக்கம் 24 வரையான வாக்குகள்...

02 பக்கம்

## கருத்துச் சுதந்திரத்தை இலங்கை ஏற்கிறது

### ஐ.நா. பொதுச் சபையில் அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



பிரஜையொருவருக்கு கருத்துச் சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமை உண்டு என்பதை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, அந்த சுதந்திரமானது அரசியலமைப்பு ஒழுங்குக்குள் இருக்க வேண்டியதுடன், சட்டத்தின் எல்லைக்குள் அமைவது அவசியமென சுட்டிக்காட்டியுள்ளார்.

02 பக்கம்

## 10,000 ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சா பயிர்ச்செய்கை

### தயாராகிறது அமைச்சரவைப்பத்திரம்

02 பக்கம்

## உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில்

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் முதற்தடவையிலேயே சித்தியடைந்து, க.பொ.த. உயர்தரம் கற்பதற்கு தகுதிபெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து புலமைப்பரிசில் பெற்றுக்கொடுக்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

02 பக்கம்



## எம்மோடு இணையாதோருக்கு வேட்புமனுக்கள் கிடையாது!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு

யோ.தர்மராஜ்

ஐக்கிய மக்கள் சக்தியுடன் தற்போது இணையாத யாருக்கும் எதிர்காலத்தில் வேட்புமனு தாக்கலுக்கு இடமளிக்கப்படாது. எனவே, இணைய விரும்புவோர் தற்போதே இணைந்துகொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

02 பக்கம்



தியாக தீபம் திலீபனின் 35ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து ஊர்தி பவனி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் ஊர்தி பயணிக்கவுள்ளதுடன், இன்று திங்கட்கிழமை காலை நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவாலயத்தை சென்றடையவுள்ளது. (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

## ஜனாதிபதி ரணில் ஜப்பான் பயணம்

### பிலிப்பைன்ஸுக்கும் செல்வார்

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று அதிகாலை ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு பயணமாகின்றார்.

முதலில் ஜப்பானுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி...

02 பக்கம்

## உஷ்



அரசாங்கத்தின் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தை தோல்வியடையச் செய்வதற்கு எதிரணியில் உள்ள கட்சிகள் இரகசிய திட்டங்களை தீட்டி வருகின்றன. அப்படி தோற்கடித்தால் உடனடி பொதுத் தேர்தலுக்கு செல்லலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்குள் உள்ளவர்கள் சிலரும் இந்த முயற்சியின் பின்னால் இருப்பதாக தெரிகிறது.

## மின்வெட்டை தவிர்க்க நிலக்கரி கொள்வனவு

### அமைச்சரவையிடம் அவசரக் கோரிக்கை

லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக இரண்டு நிறுவனங்களிடமிருந்து நிலக்கரியை அவசரமாக கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி கோரப்பட்டுள்ளது.

நாட்டிற்கு தேவையான நிலக்கரி இறக்குமதியில் தாமதம் மற்றும் விலைமனுக்கோரலுக்கான விநியோகத்தர்கள் முன்வராத அபாயத்தை மேற்கோள்காட்டி, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இரண்டு நிறுவனங்களிடமிருந்து...

02 பக்கம்

## மக்கள் பிரதிநிதிகள் இல்லாத மாகாண, உள்ளூராட்சி சபைகள்

### சட்டவிரோதமானதென மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு



யோ.தர்மராஜ்

மக்கள் பிரதிநிதிகள் இல்லாது மாகாண சபைகளையும் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தையும் முன்னெடுத்துச் செல்வது முற்றிலும் சட்டவிரோதமானதென தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

சீனா பக்கத்து வீட்டுக்காரன், இந்தியா சகோதரன் எண்டு ரணில் சொன்னாரே? இப்போ ஜெனீவாவில உதவுறது யாராம்...?






WesternUnion WU ஊடாக அனுப்பும்
வெளிநாட்டுப் பணத்தை
ஓர் அழைப்பினால் வீட்டிலிருந்தே
உங்கள் மக்கள் வங்கிக் கணக்கில் வைப்பிலிடலாம்!

உடனடி அழைப்பு, வட்ஸ்அப் மற்றும் வைபர் சேவைக்கு 071 635 6454 அல்லது 071 635 6512 க்கு அழையுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
Pride of the Nation

AA- (lka) ஃபிட்ச் ரேட்டிங், AA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

# சூரிய மின்சக்தியில் இயங்கும் படகுச் சேவை கொழும்பில்



கொழும்பு நகரில் நாளாந்தம் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக பத்தரமுல்லை தியத்த உயன மற்றும் அக்கொன, ஹீனட்டிகும்புர ஆகிய பகுதிகளிலிருந்து வெள்ளவத்தை வரை பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இலங்கையில் சூரிய மின்சக்தி மூலம் இயக்கப்படும் முதலாவது பயணிகள் படகுச் சேவை இது எனக் குறிப்பிட்டார்.

சூரிய மின்சக்தி மூலம் இயக்கப்படுவதால் இது 100 சதவீதம் சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்று அமைச்சர் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் கொழும்பு நகரின் உள்ளக நீர்வழிப் பாதைகளில் இவ்வாறான படகுச் சேவைகளை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அமைச்சர், இதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் எனவும் தெரிவித்தார்.

சூரிய மின்சக்தி ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம் தற்போதைய எரிபொருள் பிரச்சினைக்கும் நாடு எதிர்நோக்கும் மின்சார நெருக்கடிக்கும் தீர்வு கிடைக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு இயங்கும் இந்தப் படகுகள் ஓடும்போது சத்தம் எழுப்புவதில்லை. மற்றும் எரிபொருள் நுகர்வு இல்லை. நீர்வாழ் விலங்குகள் மற்றும் பறவைகளின் வாழ்க்கைச் சுழற்சியை தொந்தரவு செய்யாது.

இந்தப் படகுகள் பத்தரமுல்லை நீர் பூங்கா மற்றும் ஹீனட்டிகும்புர ஆகிய இடங்களிலிருந்து வெள்ளவத்தையை 30 நிமிடங்களுக்குள் சென்றடையலாம்.

மேலும், பத்தரமுல்லையில் இருந்து வெள்ளவத்தை வரை ஒரு நபருக்கு 200 ரூபாவும் அக்கொன, ஹீனட்டிகும்புர முதல் வெள்ளவத்தை வரை ஒரு நபருக்கு 300 ரூபாவும் அறவிடப்படும்.

இந்தப் படகு சேவையானது தினசரி அலுவலக நேரங்களில் இயங்கும் மற்றும் ஒரு படகில் 8 பேர் பயணம் செய்வதற்கான போக்குவரத்து வசதிகளை வழங்குகிறது.

மேலும், பத்தரமுல்லை மற்றும் அதனைச் சூழவுள்ள அரச மற்றும் தனியார் அலுவலகங்கள், கேட்வே சர்வதேச பாடசாலை, நாவல திறந்த பல்கலைக்கழகம், 176 பஸ் பாதை, 138 மற்றும் 122 பஸ் பாதைகள், வெள்ளவத்தை புகையிரத நிலையம் ஆகிய இடங்களுக்கு இந்த படகு சேவை மூலம் இலகுவாக செல்ல முடியும்.

# போராட்டக்காரர்கள் கைதானமை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குக!

## பொலிஸ்மா அதிபருக்கு மனித உரிமை ஆணைக்குழு பணிப்பு

சோஷலிச இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தின் போது 83 பேர் கைதுசெய்யப்பட்டமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உடனடி அறிக்கையொன்றைக் கோரியுள்ளது.

இது தொடர்பான அறிக்கையை இன்று காலை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமையை பரிசோதிப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளை சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் நேற்று முன்தினம் (24) வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் கொழும்பு மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரின் நேரடி கண்காணிப்பில் இடம்பெற்று வருகின்றன.

# எல்ல வனத்துக்குத் தீ; மாணவர்கள் 16 பேர் கைது

எல்ல வனப்பகுதிக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் 16 பாடசாலை மாணவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எல்ல வனப்பகுதியில் சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பு தீயினால் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பதுளை, ஹாலி-எல மற்றும் நமுனுகுல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எல்ல வனப்பகுதியை பார்வையிட வரும் சிலர் குறித்த பிரதேசத்தை அழித்து வருவதாக எல்ல பிரதேச சபையின் தலைவர் மாலக பிரபாத் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் இலங்கை வருகை



ரோமில் உள்ள ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய முகவர் நிலையங்களுக்கான அமெரிக்கத் தூதுவர் சின்டி மெக்கெய்ன் நேற்று மாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர் எதிர்வரும் 28ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் என அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அமெரிக்காவின் உதவித்திட்டங்களை மேலும் விரிவுபடுத்தும் வகையில் அவரது விஜயம் அமையவுள்ளது.

கொழும்பிலுள்ள சிரேஷ்ட அரச அதிகாரிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளுடன் அவர் சந்திப்புகளை நடத்தவுள்ளார். மேலும், அமெரிக்க தூதுவர் ஜூலி சங் உடன் இணைந்து மத்திய மாகாணத்துக்கு விஜயம் செய்யவுள்ள அவர் பாடசாலைகளுக்குச் செல்லவுள்ளதுடன், விவசாய ஆராய்ச்சி வசதிகள் குறித்து சமூக அமைப்புகளுடனும் கலந்துரையாடல் நடத்தவுள்ளதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அண்மையில் வருகை தந்திருந்த அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையத்தின் நிர்வாகி சமந்தா பவர் 60 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி அளிப்பதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணில்...

ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானின் முன்னாள் பிரதமர் சின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளவுள்ளார்.

இதனையடுத்து ஜப்பானிய பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நிதியமைச்சர் ஆகியோருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

அதன்பின்னர், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்களின் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்காக ஜனாதிபதி நாளை மறுதினம் பிலிப்பைன்ஸ் செல்கின்றார். இதன்போது பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பொங்பொங் மார்கஸ் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா ஆகியோருடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் விஜயங்களை நிறைவு செய்துகொண்டு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 30 ஆம் திகதி நாடு திரும்புவார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் தினுக் கொலம்பகே, ஊடக பணிப்பாளர் ஷானுக்க கருணாரத்ன, நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பான பணிப்பாளர் ரந்துல அபேவீர, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோர் இந்த விஜயத்தில் பங்கேற்கின்றனர்.

இதேவேளை ஜனாதிபதியின் பிலிப்பைன்ஸ் விஜயத்தில் திறைசேரி செயலாளரும் இணைந்து கொள்ள உள்ளார். பிலிப்பைன்ஸ் விஜயத்தில் தினுக் கொலம்பகே மற்றும் ரந்துல அபேவீர பங்கேற்க மாட்டார்கள் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

## உயர்தரம் கற்கும்...

இதற்கமைய புலமைப்பரிசில் பெறுவதற்காக ஒரு கல்வி வலயத்திலிருந்து தகுதியுடைய 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அதன்படி நாடு முழுவதுமுள்ள 99 கல்வி வலயங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் இரண்டாயிரத்து 970 மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

புலமைப்பரிசில் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு, அவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் ஆகக்கூடியது 24 மாதங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி க.பொ.த. உயர்தர கல்வியாண்டு ஆரம்பிக்கப்பட்டதும் இந்த புலமைப்பரிசில் வழங்குவதற்கான விண்ணப்பங்களை கோரும் வகையில் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்படும்.

இது தொடர்பாக மாகாண பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு துரிதமாக அறிவிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

## கருத்துச் சுதந்திரத்தை...

அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் 77 ஆவது பொதுச் சபையில் கலந்துகொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பித்து நேற்று முன்தினம் (24) உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய கன்னி உரையின்போது, நாட்டு மக்கள் கோரும் சமூக மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்தார்.

அதன்படி ஜனநாயக நிர்வாகத்தின் கட்டமைப்பை வலுப்படுத்துதல், நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துதல் உள்ளிட்ட அவசர ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்தங்கள் ஊடாக ஜனநாயக ஆட்சியானது சுதந்திரமான மேற்பார்வை நிறுவனங்களுடனும் மேம்படுத்தப்பட்ட பொது ஆய்வுகளுடனும் வலுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம்.

நீதிக்கான அணுகலை வழங்குவதில் வெளிப்படைத்தன்மை, ஒருமைப்பாடு, பொறுப்புக்கூறல் உள்ளடக்கியவற்றை உறுதிப்படுத்த சட்ட மற்றும் நிர்வாக கட்டமைப்புகள் பலப்படுத்தப்படுகின்றன. இந்த செயற்பாடுகளில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் அதிக பங்களிப்பு உறுதிசெய்யப்படும்.

எமது மக்கள் எதிர்கொண்டிருக்கும் சமூக, பொருளாதார இன்னல்கள் குறித்து மிகுந்த அக்கறை உள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்டத்தில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

பயங்கரவாதத்தின் கொடுமை பற்றி நான் சுருக்கமாக குறிப்பிட வேண்டும். இலங்கை பல தசாப்தங்களாக பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டது.

பயங்கரவாதிகளின் இலக்குகளைத் தேர்ந்தெடுப்பது, நிதியுதவி மற்றும் தீவிரமயமாக்கல் முறைகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை ஆயுதங்களாகப் பயன்படுத்துவது ஆகியன தொடர்கின்றன.

பயங்கரவாதிகள் இணையத்தளம் மற்றும் சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்துவதையும் துஷ்பிரயோகம் செய்வதையும் தடுக்க சட்ட அமுலாக்க நடைமுறைகள் அமைக்கப்பட வேண்டும். நாட்டில் நெருக்கடி நிலைமைகள் இருக்கின்ற போதிலும், அவற்றிலிருந்து மீள்வதற்கான சவால்களை ஏற்றுக்கொண்டு யாரையும் பின்னோக்கிச் செல்லவிடாமல் சுதந்திரமான முன்னேற்றத்தை அடைவோமென உறுதியளிக்கிறோம். அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளிலிருந்து நாடு மீள்வதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்றார்.

## மக்கள் பிரதிநிதிகள்...

ஹம்பாந்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாகாண சபையானது வெள்ளை யானை, மேலதிக செலவு மற்றும் இந்த மாகாண சபையில்லாது நாட்டை முன்னெடுக்க முடியும் எனப் பல்வேறு கருத்துகளை வைத்திருக்கும் சிலர் மாகாண சபை முறையை வேண்டாம் எனக் கூறுகின்றனர்.

ஆனால், இன்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இல்லாது மாகாண சபைகள் இயங்குகின்றன. மாகாண சபை உறுப்பினர்களுக்கான செலவு மிகக்குறைவானது. மாகாண சபை முறைமை இன்று இல்லை என்றுக்கூறினாலும், உறுப்பினர்கள் மாத்திரமே இல்லை. மாறாக, ஆளுநர்கள் இன்றும் அதிகாரத்தில் இருக்கின்றனர். மக்கள் பிரதிநிதி இல்லாது ஆளுநர் மாத்திரம் தனியாக ஆட்சி செய்கிறார்.

ஜனாதிபதியால் தெரிவு செய்யப்பட்ட 9 பேரினால் அனைத்து மாகாணங்களிலும் நிதி அதிகாரம் நிர்வகிக்கப்படுகின்றது. எந்தவொரு அரச நிறுவனமும் மக்கள் பிரநிதிகள் இல்லாது அதன் நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வது பாவம் மற்றும் தவறான செயற்பாடாகும்.

உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படாது செயலாளர்கள் மற்றும் ஆணையாளர்களினால் நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுப்பது, மக்கள் உரிமைகளை முற்றாக மீறும் செயலாகுமென உயர் நீதிமன்றம் தீரப்பளித்துள்ளது. எனவே, மக்கள் பிரதிநிதிகள் இல்லாது முழு மாகாண சபையையும் முன்னெடுத்துச் செல்வது முற்றிலும் சட்டவிரோதமானதாகும். மக்களின் மூளைகளை மாற்றிக்கொள்ளாத வரை உறுப்பினர்களையும் சிஸ்டத்தையும் மாற்ற முடியாது. நாட்டிலுள்ள மற்றும் வீட்டிலுள்ள அனைவரும் அரசியல்வாதிகளாக மாற வேண்டும். அப்போதே மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றார்.

## எம்மோடு...

ஐக்கிய மக்கள் சக்தியின் கெஸ்பேவ தொகுதி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்று வெள்ளைப்பூண்டில் மோசடி செய்தவர்கள் இன்று எரிவாயுவில் மோசடி செய்கின்றனர். அன்று சீனியில் மோசடி செய்தவர்கள் இன்று நிலக்கரியில் மோசடி செய்கின்றனர். இவ்வாறு மோசடி செய்யும் கூட்டத்தோடு, இணையுமாறே எனக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியோடு நானும் அரசாங்கத்தில் இணைந்திருந்தால் இன்று நானும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அரசாங்கம் இன்று அச்சத்திலேயே இருக்கின்றது. மக்கள் மத்தியில் செல்லவே முடியவில்லை. ஒருவேளை, மக்கள் மத்தியில் செல்ல முயற்சிக்கும் போது, தலைக்கவசத்தால் தாக்கப்படுகின்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே, கீர்த்தி மிக்க இலங்கையை இன்று, மோசமான நிலைமைக்கு தள்ளியுள்ளது. நாட்டுக்கு உதவி கேட்டு உலக நாடுகளிடம் கையேந்திக் கொண்டிருகின்றோம். சில நாடுகள் உதவி செய்வதாகக் கூறினாலும், தங்களுக்கு நாட்டில் இந்தப் பகுதி வேண்டும் என்ற நிபந்தனைகளை முன்வைக்கின்றனர். இறுதியில் இலங்கையை ஏலத்திற்கு விட்டுள்ளனர்.

இதேவேளை, இன்று காகமும் யானையும் திருமணம் செய்துக்கொண்டுள்ளன. இதனால், சிலருக்கு நாட்டை சீரழித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிடமே உறுப்புரிமைக்கான பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொள்ளாத யாருக்கு எதிர்காலத்தில் வேட்புமனு தாக்கலுக்கு வாய்ப்பளிக்கப்படாது.

இணைய வேண்டுமாயின் தற்போதே எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள் - என்றார்.

## ஜெனீவா சமரில்...

கிடைக்க வாய்ப்புள்ளதாகவும், சுமார் 12 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 47 நாடுகள் ஆகும்.

இம்முறை அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, மொன்டனீக்ரோ போன்ற நாடுகள் முன்வைத்துள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு மேலதிகமாக மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையும் வலுவான பரிந்துரைகளை வழங்கியுள்ளது. இவற்றில் இலங்கையின் பாதுகாப்புச் செலவினங்களைக் குறைத்தல், வடக்கு-கிழக்கில் படையினரைக் குறைத்தல், பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல முக்கிய பரிந்துரைகள் உள்ளன.

இலங்கை தொடர்பான பிரேரணை மீதான ஜெனீவா பேரவையின் வாக்கெடுப்பு ஒக்டோபர் 04ஆம் திகதி முதல் 06ஆம் திகதி வரையான தினங்களுக்குள் நடைபெறவுள்ளது.

## குடும்பமொன்றுக்கு...

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீடத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

நாட்டின் பணவீக்கம் மற்றும் வரிச்சுமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் மக்கள் மீது பெருமளவான மறைமுக வரிகளை சுமத்தியுள்ளதால், நாட்டில் தற்போது பாரிய பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் வரி சுமத்தலையடுத்து நாங்கள் முன்னெடுத்த ஆய்வுக்கு அமைய ஒரு குடும்பத்தின் சாதாரண வரிச்சுமை 28 ஆயிரம் ரூபாவாக காணப்படுகின்றது. கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வரி திருத்தத்தினால் இந்த வரிச் சுமைக்கு மேலதிகமாக ஒரு சாதாரண குடும்பம் மாதமொன்றுக்கு 4 ஆயிரம் ரூபாவை வரியாக சுமக்க வேண்டியுள்ளது.

வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள குடும்பமொன்று மாதமொன்றுக்கு 14 ஆயிரம் ரூபாவை மறைமுக வரியாக அரசாங்கத்துக்கு செலுத்துகின்றது என்பதையும் கண்டறிய முடிந்தது. நாட்டிலுள்ள 10 வீதமான வறுமையான குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் 4 ஆயிரத்து 500 ரூபா சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இவர்களுக்கு மாதமொன்றுக்கு 4 ஆயிரத்து 500 ரூபா மானியம் வழங்கினாலும் அரசாங்கம் அவர்களிடமிருந்து 6 ஆயிரத்து 675 ரூபாவை மறைமுக வரியாக அறவிடுகின்றது.

எனவே, நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வரி முறையை திருத்தம் செய்ய வேண்டும். மறைமுக வரியை குறைத்து, நேரடி வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் நேரடி வரியை முறையாக நடைமுறைப்படுத்தினால், அதாவது, நபரொருவரின் வருமான வரியை முறையாக வசூலித்தால், 350 – 400 பில்லியன் வருமானத்தை அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ள முடியும்.

## சதொசவினால்...

*யோ.தர்மராஜ்*

பொருட்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களிடம் இருந்து பருப்பு மற்றும் டின் மீனை (செமன்) அதிக விலையில் கொள்வனவு செய்து, ஒரு கிலோ பருப்பை 89 ரூபாவிற்கும் டின் மீனை 110 ரூபாவிற்கும் விற்பனை செய்ததன் மூலம் இலங்கை சதொச நிறுவனம் திறைசேரிக்கு 600 கோடி ரூபா நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, இறக்குமதியாளர்களிடம் இருந்து 154 ரூபாவுக்கு கொள்வனவு செய்த ஒரு கிலோ பருப்பை 65 ரூபாவுக்கும், 210 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட டின் மீனை 100 ரூபாவுக்கும் சதோச ஊடக மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்காலத்தில் முன்னாள் ஜனாதிபதியினால், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் லங்கா சதொச ஊடாக பருப்பு மற்றும் டின் மீன்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மின்வெட்டை...

ஒன்பது ஏற்றுமதிகளை பெறுவதற்கு அமைச்சரவையிடம் அனுமதி கோரியுள்ளார்.

அவசரக் கொள்வனவாக 180 நாள் கடன் வசதியின் கீழ் 300,000 மெட்ரிக் தொன் வாங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. ஆனால், இந்த செயல்முறைக்கு குறைந்தது இரண்டு மாதங்கள் ஆகலாம் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

அதன்படி, ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள Black Sand Commodities FZ-LLC நிறுவனத்திடமிருந்து நான்கு ஏற்றுமதிக்கான அவசரப் பொருட்களையும் சிங்கப்பூர் ஓவர்சீஸ் எண்டர்பிரைசஸ் தனியார் நிறுவனத்திடமிருந்து ஐந்து ஏற்றுமதிகளையும் வாங்க அவர் முன்மொழிந்துள்ளார்.

இது 2.25 மில்லியன் மெட்ரிக் தொன் நிலக்கரியை வழங்குவதற்கு திறந்த கேள்விமனுக்கோரல் அழைக்கும் முடிவை எடுக்கிறது. கேள்விமனுக்கோரல் காலம் 42 நாட்களில் இருந்து 21 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது.

ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு, டிசம்பரில் இறக்கப்பட உள்ள நிலக்கரியின் மீதியான 1.142 மில்லியன் மெட்ரிக் தொன்களை விரைவாக வழங்க விநியோகஸ்தர்கள் புதிய இறுக்கமான கட்டண விதிமுறைகளை கோரியுள்ளனர்.

லங்கா நிலக்கரி நிறுவனத்தின் பொது முகாமையாளர் நாமல் ஹேவகே, இவ்வாறான 21 ஏற்றுமதிகள் வரவுள்ளதாக தெரிவித்தார்.

## 10,000 ஏக்கர்...

இரத்தினபுரி மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சா பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சின் ஊடாக அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி அனுமதிக்கென சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அறியமுடிந்தது. சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, சுகாதார அமைச்சின் ஊடாக இந்த முன்மொழிவை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்குலக நாடுகளில் கஞ்சாவுக்கு பெரும் கேள்வி இருக்கின்ற நிலையில், அதனை ஏற்றுமதி செய்வதன் ஊடாக நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவு தீர்வுகாணக் கூடியதாக இருக்கும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கஞ்சா பயன்பாடு குறித்து எதிர்மறையான கருத்து நாட்டில் நிலவுகிறது. புகைபிடிப்பதை விட கஞ்சாவில் அதிக பயன்கள் உள்ளன. ஆயுர்வேத மருந்துகளில் கஞ்சாவை ஒரு முக்கிய மூலப்பொருளாக பயன்படுத்தலாம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வெளிநாட்டு கைபேசியை பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்து பண மோசடி செய்த இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் பெண் ஒருவரிடம் வெளிநாட்டிலிருந்து வந்த கைபேசி ஒன்று விற்பனைக்கு இருப்பதாக தெரிவித்து, பண மோசடியில் ஈடுபட்டுவந்த இருவர் நேற்று முன்தினம் (24) மட்டு. தலைமையக பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், அவரிடமிருந்து தங்க நகைகளையும் அவர் அபகரித்துள்ளதுடன், மோசடியில் ஈடுபட்டுவந்த 19 மற்றும் 39 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு நகர்ப் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய பெண் ஒருவரின் கைபேசியில் தொடர்புகொண்டு அவுஸ்திரேலியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட கைபேசி விற்பனைக்கு இருப்பதாக தெரிவித்து அந்தப் பெண்ணிடமிருந்து சத்துருகொண்டான் பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரும் கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் ஒருவரும் சேர்ந்து கைபேசியை வழங்காது 69 ஆயிரம் ரூபா பணம் தங்கசங்கிலி, பென்ரன், தோடு என்பவற்றையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடரபில் குறித்த சந்தேகநபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நேற்று (25) ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர். அதன்போது, 39 வயதுடைய நபரை எதிர்வரும் 03ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும், 19 வயது இளைஞனை ஒரு இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# மாகாணசபை முறைமையை வலுப்படுத்த தெற்கு இளைஞர்கள் தயார்:

## திட்ட முன்மொழிவு மஹிந்த தேசப்பிரியவிடம் கையளிப்பு







மாகாண சபை முறைமையை வலுப்படுத்துவதற்காக ஜனநாயக இளைஞர் அமைப்பினர் உள்ளிட்ட இளைஞர் அமைப்புகள் பல ஒன்றிணைந்து தயாரித்த சமூகமயப்படுத்தப்பட்ட முன்மொழிவு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு ஜனநாயக இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் ஹம்பாந்தோட்டை கிரீன் ஹோட்டல் வளாகத்தில் நேற்று முன்தினம் (24) நடைபெற்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தற்போதைய தலைவருமான மஹிந்த தேசப்பிரியவிடம் தெற்கு இளைஞர்கள் தயாரித்த திட்ட முன்மொழிவு உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டது.

குறித்த திட்ட முன்மொழிவில் மாகாண ஆளுநர், முதலமைச்சரும் அமைச்சரவையும், மாகாண சபை மற்றும் மத்திய அரசு, சட்ட ஏற்பாடு, மாகாண நீதிமன்ற முறைமை, மாகாண நிதி அதிகாரம், மாகாண அரச சேவை, காணி மற்றும் இயற்கை வளங்கள், பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் மாகாணசபை முறைமையை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளாக அதில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இளைஞர் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தி 200 பேர் வரையில் கலந்துகொண்ட இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி திசரு திசாநாயக்க, மாற்று அணியை பிரதிநிதித்துவப்படுத்தி கம்மன்பில, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்கில் சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

## நடப்பாண்டின் அரைப்பகுதியில் மாத்திரம் 246 பேர் பராமரிப்பு நிலையங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குருபரன் தகவல்

பொருளாதார நெருக்கடியினால் பிள்ளைகளை பராமரிக்க முடியாது எனத் தெரிவித்து, சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பிள்ளைகளை சேர்க்கும் பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் இ.குருபரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வடமாகாணத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக பிள்ளைகளை வைத்து பராமரிக்க முடியவில்லையென சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளை சேர்க்கும் பெற்றோரின் எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலேயே அதிகளவான பிள்ளைகளை பெற்றோர் சேர்த்துள்ளனர்.

வடக்கில் 2021ஆம் ஆண்டு 158 பிள்ளைகள் அவ்வாறு சேர்க்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு பொருளாதார நெருக்கடி கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியமையால் இந்த ஆண்டின் அரையாண்டு காலப்பகுதிக்குள் 246 பிள்ளைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் 124 பேரும் , கிளிநொச்சி மாவட்டத்தில் 62 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 45 பேரும், மன்னார் மாவட்டத்தில் 07 பேரும், வவுனியா மாவட்டத்தில் 08 பேருமாக 246 பிள்ளைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக எம்மால் பிள்ளைகளை பராமரிக்க முடியாதுள்ளதென பெற்றோரால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை எமது திணைக்களம் பரிசீலித்து, பெற்றோரின் பொருளாதார நிலைமைகளை அறிந்து உண்மையில் அவர்களால் பிள்ளைகளை பராமரிக்க முடியாதா என்பதனை உறுதிப்படுத்திய பின்னர் வடமாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளை சேர்க்க அனுமதிப்போம் - என்றார்.

# மட்டக்களப்பில் வைத்தியர் ஒருவரின் கால்நடைகளை திருடிய மாணவர்கள் கைது!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவு பிரதேசத்திலுள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டிலிருந்த கால்நடைகளை திருடிய 5 பாடசாலை மாணவர்களை கைதுசெய்து, அவர்களது பெற்றோரை வரவழைத்து எச்சரித்து விடுவித்துள்ள சம்பவம் நேற்று (25) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

10 கோழி மற்றம் நாய் என்பவற்றையே இவ்வாறு திருடிச்சென்றுள்ளனர். உயர் தரத்தில் கல்வி கற்றுவரும் மாணவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வைத்தியரின் வீட்டில் சம்பவதினமான கடந்த வெள்ளிக்கிழமை இரவு உள்நுழைந்த 5 மாணவர்கள் வீட்டின் பின்பகுதியில் அமைந்துள்ள கோழிக் கூட்டில் இருந்த 10 கோழிகளை திருடிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த நாய் ஒன்றையும் திருடிக்கொண்டு தப்பி ஓடியுள்ளனர்.

இது தொடர்பாக வைத்தியர் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டுக்கமைய, பொலிஸாரல் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மன்னித்துவிடுமாறு வைத்தியர் கோரியதை அடுத்து, பெற்றோரை அழைத்து மாணவர்களை எச்சரித்து விடுவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.





பேருவளை பொலிஸ் நிலையத்துக்கு புகழ் சேர்த்த பொலிஸ் அதிகாரிகளை கௌரவிக்கும் நிகழ்வொன்று பேருவளை சாரா மண்டபத்தில் நடைபெற்றது. நிலையப் பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் களுத்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஜேசுந்தர அதிதியாக கலந்துகொண்டார். (படங்கள்- பீ.எம்.முக்தார்)

# முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம்





(அஷ்ரப் ஏ சமத்)

கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் கடந்த 25 வருட காலமாக இயங்கிவரும் கல்வி பயிற்சி நிலையத்தினால் ஆரம்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் (24) கொழும்பிலுள்ள ரமடா ஹோட்டலில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக கல்வி இராஜங்க அமைச்சர் அரவிந்தகுமார் கலந்துகொண்டார்.

இவ்வைபவம் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஸ்தாபகத் தலைவர் ஆசிரியர் மருதூர் ஏ. ஹசன் தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் கலாநிதி ஏ.ஆர்.எம்.தௌபீக், சன்ரைஸ் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.இசட் ஹம்சா, உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# போதைப்பொருள் பயன்பாட்டால் யாழில் நபரொருவர் உயிரிழப்பு

அதிகளவு ஹெரோயின் போதைப்பொருளை பயன்படுத்திவந்த யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் ேர்ந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், இவர் நேற்று (25) அதிகாலை உயிரிழந்துள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வீடு திரும்பியுள்ளதுடன், அவர் ஹெரோயின் போதைப் பொருளை அதிகளவில் பயன்படுத்தியதனால் உயிரிழந்தாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவப் பரிசோதனையிலும் அவரது உயிரிழப்புக்கு ஹெரோயின் போதைப்பொருளை அதிகளவு எடுத்துக்கொண்டமையே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உயிரிழந்த நபர் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையிலும் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸார் கூறினர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 6 மாதங்களில் 10இற்கும் மேற்பட்டோர் ஹெரோயின் போதைப்பொருள் பயன்பாட்டால் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கைதான போராட்டக்காரர்களில் சிலர் பிணையில் விடுதலை



கொழும்பில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எரங்க குணசேகர உள்ளிட்ட மூவரை பிணையில் விடுதலை செய்ய மாளிகாகந்த நீதவான் உத்தவிட்டுள்ளார்.

தலா இரண்டு இலட்சம் ரூபா அடிப்படையிலான சரீரப் பிணையில் அவர்களை விடுவிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து ஆர்பபாட்டக்காரர்கள் 82 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்களில் மூவர் இவ்வாறு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் சிலர் பொலிஸாரினால் பிணியில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தியாகி திலீபனுக்கு சாவகச்சேரியில் அஞ்சலி





(சாவகச்சேரி நிருபர்)

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து தன்னுயிரை தியாகம் செய்த திலீபனுக்கு நேற்று முன்தினம் (24) சாவகச்சேரி நகரில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தீயாக தீபத்தின் 35ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பொத்துவிலில் இருந்து நல்லூர் வரையான ஊர்திப் பவனி சாவகச்சேரி நகரை வந்தடைந்தபோதே குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் திலீபனுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்த நகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தமிழ்த் தேசத்தின் அங்கீகாரம், இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி, அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைசட்டத்தை நீக்கல், பௌத்த சிங்கள மயமாக்கலை நிறுத்தல் ஆகிய தமிழர் தரப்புக் கோரிக்கைகளை வலியுறுத்தி “திலீபன் வழியில் வருகிறோம்” எனும் தொனியில் குறித்த ஊர்திப் பவனி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கைவிடப்பட்ட நிலையில் சிசு மீட்பு

பண்டாரகொஸ்வத்த பிரதேசத்திலுள்ள வாவியொன்றுக்கு அருகிலிருந்து புதிதாக பிறந்த சிசுவொன்று நேற்று (25) கைவிடப்பட்ட நிலையில் பெண்ணொருவரினால் மீட்கப்பட்டுள்ளதாக வாரியபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் தலையீட்டில் குறித்த சிசு அம்பியூலன்ஸ் ஊடாக நிக்கவெரட்டிய ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. குழந்தையின் உடல்நிலை சிறப்பாக இருப்பதாகவும் மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெண்ணொருவர் அவரின் மாடுகளை கட்டுவதற்காக அந்த பகுதிக்குச் சென்ற சந்தர்ப்பத்தில், சுற்றியிருந்த காட்டுப்பகுதியை அண்மித்த பிரதேசத்தில் குறித்த சிசு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உடனடியாக கிராம மக்களும் பொலிஸாரும் ஒன்றிணைந்து வைத்தியசாலையில் சேர்க்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# சூட்சுமமாக மரக்குற்றிகளை கடத்திய நபர் கைது





கற்களுக்குள் புதைத்து கடத்தப்பட்ட மரக்குற்றிகளை சாவகச்சேரி பொலிஸார் நேற்று (25) கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் ரிப்பர் ரக வாகனமொன்றில் மரக்குற்றிகள் கடத்தப்படுவதாக சாவகச்சேரி பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் கற்களை ஏற்றிச்சென்ற ரிப்பர் வாகனத்தினை பொலிஸார் வழிமறித்து சோதனை நடத்தியுள்ளனர்.

இதன்போதே ரிப்பர் வாகனத்துக்குள் மரக்குற்றிகளை ஏற்றி அதன் மீது கற்களால் நிரப்பி மரக்குற்றிகளை மறைத்து கடத்திச் சென்றமை பொலிஸாரால் கண்டறியப்பட்டுள்ளது.

அதனையடுத்து ரிப்பர் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மீட்கப்பட்டுள்ள மரக்குற்றிகளின் பெறுமதி சுமார் 20 இலட்சம் ரூபா எனவும், மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்..







தமிழன், த மோர்னிங், அருண பத்திரிகைகளை வெளியிடும் லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் நான்காவது வருட நிறைவையொட்டி நேற்றுமுன்தினம் நிகழ்வொன்று அதன் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது ஆங்கில பத்திரிகை ஆசிரியர் மந்தனாவினால் கேக் வெட்டப்படுவதையும், பணியாளர்கள் மத்தியில் நிறுவனப் பணிப்பாளர் மாதவ மடவல உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு - லலித் பெரேரா, சமன் அபேசிறிவர்தன)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, செப்டெம்பர் 26ஆம் திகதி, திங்கட்கிழமை

# தேவை அரசுக்கு கடிவாளம்!

அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சோஷலிச இளைஞர் அமைப்பு கடந்த சனிக்கிழமை (24) ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தைக் கலைப்பதற்கு பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது, இரண்டு தேரர்கள் உள்ளிட்ட 84 பேரை தமது பொறுப்பில் எடுத்ததாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். இவர்களில் நான்கு பெண்களும் அடங்குகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் மக்கள் மீதான சுமை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பின்னணியில், எழுத்துபூர்வ அனுமதி பெறப்படாவிட்டால், உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் எந்தவொரு நபரும் வீதி, மைதானம், கரை அல்லது திறந்த வெளியில் பொதுக் கூட்டம் அல்லது ஊர்வலத்தை நடத்தவோ அல்லது ஒன்றுகூடவோ கூடாது என ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டு சில மணிநேரங்களில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டம் நடந்துகொண்டு கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், மனித உரிமைகளாவது - மண்ணாங்கட்டியாவது என்ற தோரணையில் செயற்பட்டிருக்கும் ரணில் அரசு, மக்களை ஒருவித அச்சுறுத்தலுக்குள் வைத்திருப்பதை விரும்புவது இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து தெளிவாகிறது.

தவறு செய்வோர், அதற்காக சட்டத்தை வளைப்பது - சட்டத்தில் உள்ள ஓட்டைகளை இலாவகமாகப் பயன்படுத்துவது - குறித்தெல்லாம் அறிந்திருக்கின்றோம். ஆனால், சட்டத்தையே தவறாக அர்த்தப்படுத்தி - பயன்படுத்தி - சட்ட முறையற்ற வேலையை முன்னெடுக்கும் அரசாங்கத்தை இப்போதுதான் காண்கிறோம்.

அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சிப் போராட்டத்தை தன்னுடைய அரசியல் இலக்குகளுக்காக பயங்கரவாத நடவடிக்கையாக சித்திரித்து, சட்ட அர்த்தம் கற்பித்து, அந்தக் கொடூரச் சட்டத்தை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக ஏவிவிட்ட கீழ்த்தர அரசு இது என்று கூறினாலும் மிகையில்லை.

ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் செய்வது என்பதும் கூட மக்களின் கருத்துச் சுதந்திரத்தை வெளியிடும் ஓர் அடிப்படை உரிமையின் பாற்பட்டதே. அந்த அடிப்படை உரிமையை மீறுவதற்காக, அதனை பயங்கரவாதமாக சித்திரிக்கும் படுபோக்கிரித்தனமான பண்பியல்பைப் பார்த்து உலகமே விக்கித்துப் போய் நிற்கின்றது.

இப்படிச் சட்டத்தை - அதன் வியாக்கியானத்தை - தனது அரசியல் இலக்குகளுக்காக முறையற்ற விதத்தில் வளைக்கும் பண்பியல்பு இப்போது மற்றொரு விடயத்திலும் அரங்கேறி இருக்கின்றது.

மக்களின் அரசியல் கருத்து நிலைமையை ஒட்டிய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளினால் இலக்கு வைக்கப்படக்கூடியவை என்று தான் கருதும் இடங்களை உயர் பாதுகாப்பு வலயங்களாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தி பாதுகாக்க முற்படுகின்றது ரணிலின் அரசு.

அரச இரகசியப் பாதுகாப்பு தொடர்பான 1955 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் சில இடங்களை உயர் பாதுகாப்பு வலயங்களாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தியிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் ஒன்றுகூடிப் பயன்படுத்தும் பல இடங்களை இப்படி பொருத்தமற்ற சட்டம் மூலம், இரகசியங்களைப் பாதுகாக்கும் உயர் பாதுகாப்பு வலயங்களாக ஜனாதிபதி அறிவித்தமை சட்ட முறையற்ற செயல் என்பதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டி உள்ளது. ஹல்ஸ்டோர்ப் நீதிமன்றச் சுற்றாடலில், பொதுமக்கள் கூடும் இடங்கள் கூட இப்படி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றமை பெரும் விந்தையாகும்.

ஒரு நிலத்துண்டை, ஒரு கட்டடத்தை, ஒரு கப்பலை அல்லது வான் கலத்தை, அரச இரகசியங்களைப் பாதுகாக்கும் நோக்கில் இப்படி பாதுகாப்பு வலயப் பிரதேசமாக அறிவிக்கும் ஏற்பாட்டுக்குரியது இச்சட்டம்.

அந்தச் சட்டப் பிரிவை மக்கள் பெரும் எண்ணிகையில் கூடும் இடத்துக்குப் பொருத்த முயலும் ரணில் அரசின் நடவடிக்கை நிச்சயம் நீதிமன்றத்தினால் குட்டுப் போட்டுத் திருத்தப்படும் என்று நம்பலாம்.

இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிகிறது.

அப்படித் தாக்கலாகக் கூடிய அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பதை பரிசீலிக்கும் போதே, இந்த வர்த்தமானி உத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை.இனி எல்லாம் நீதிமன்ற வியாக்கியானத்தில்தான் தங்கியுள்ளது.

இருந்தாலும், அரசின் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக சட்டத்துறை மூலமே கடிவாளமிடப்பட வேண்டும்.

ஜனநாயகம் நிலைநாட்டப்படாவிட்டாலும் அப்படியொன்று இருக்கிறதென்றாவது காட்டிக்கொள்ள வேண்டாமா?

# திலீபன் எனும் பெருவீரன்!





**திலீபனின் 35 ஆவது நினைவுதினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

திலீபன் எனும் பெயரில் அறியப்படும் பார்த்திபன் இராசையா என்பவர் (29 நவம்பர் 1963 – 26 செப்டம்பர் 1987) தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் ஆரம்பகால உறுப்பினராகவும், முக்கிய உறுப்பினராகவும் இருந்தவராவர். இவர் இலங்கை, யாழ்ப்பாணம், ஊரெழு எனும் ஊரைச் சேர்ந்தவர். இவரின் மறைவின் பின்னர் புலிகள் அமைப்பில் லெப்டினன்ட் கேணல் திலீபன் எனும் நிலை வழங்கப்பட்டது.

இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து அறப் போராட்டத்தின் வழியில் நீரும் அருந்தா உண்ணாவிரதம் இருந்து, அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படா சமயம் உறுதியுடன் உண்ணாவிரதத்தில் உயிர்துறந்தவர். இவரை இந்திய அரசு இறக்க விட்டது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையே பின்னர் ஏற்பட்ட போருக்கு ஒரு முக்கிய காரணம்.

1987 செப்டெம்பர் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதத்தை இவர் ஆரம்பித்தார். 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன்ட் கேணலாக, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் மரணம் எய்தினார்.

திலீபனின் உண்ணாநிலைப் போராட்டமென்பது தெற்காசிய அரசியலை புரட்டிப் போட்ட நிகழ்வு. இப்பிராந்தியத்தின் நாடுகளில் தங்குதடையின்றி தன்னால் இராணுவ தலையீடு செய்துவிட முடியுமெனும் பேராசை இந்திய வெளியுறவு, பாதுகாப்பு வட்டங்களால் உருவாக்கப்பட்டதை நம்பிய ராஜீவ்காந்தி அரசின் எதேச்சாதிகாரப் போக்கை முடிவுக்குக் கொண்டுவந்த பெரும் அரசியல் நிகழ்வே திலீபனின் போராட்டம்.

இந்திய அரசிற்கு எதிராக பெரும் மக்கள் திரளை இந்தியாவிற்கு வெளியே திரட்டிவிட முடியுமென்பதை இந்தியா எதிர்பார்க்கவில்லை. மேலும், தெற்காசியாவில் விரிந்து கிடந்த ஓர் இனத்தை அரசியலாக பிணைத்த முதல் நிகழ்வு எனவும் இதைச் சொல்ல முடியும். கறுப்பு



ஜூலை உலக தமிழினத்திற்குள் அதிர்வை ஏற்படுத்தியதெனில், திலீபனின் போராட்டம் தமிழர்களை அரசியல் ஆற்றலாகத் திரட்டியது. தமிழீழம் மட்டுமல்லாது தமிழ்நாடு, மலேஷியா, மாலைதீவு, மொரீஷியஸ் என அனைத்து நாடுகளிலும் வாழும் தமிழர்களை முதன்முறையாக தமிழ்த்தேசிய அரசியலால் ஒன்றிணைக்க இயலுமென்பதை உலகிற்கு காட்டியது.

வங்கதேசத்தில் இராணுவ தலையீடு, மாலைதீவில் இராணுவ தலையீடு, தென்னிலங்கையில் இராணுவத்தலையீடு என இந்திய இராணுவத் தலையீடுகள் தங்குதடையின்றி இருந்ததை எதிர்கொண்ட முதற்போராட்டம் ஈழத்தில் திலீபனால் வெடித்தது.

இந்திய பார்ப்பனீய அதிகார வர்க்கம் வழக்கம்போல தனது மேலாதிக்க திமிரில் உதாசீனப்படுத்திய இப்போராட்டம், இந்தியப் படைகளை தமது சொந்தப் படைகள், தம்மைக் காக்க வந்த படைகள் எனக் கொண்டாடிய தமிழர்களை உறக்கத்திலிருந்து கலைத்தது. இந்தியப் படை என்பது ஆதிக்கப் படை என்பதுடன், ஆக்கிரமிக்க சிங்கள அரசிற்கு ஆதரவாகவே களமிறக்கப்பட்டது என்பதை திலீபன் தன் உண்ணாநிலையின் மூலமாக உணர்த்தியதை கண்டுணர்ந்தார்கள். தன் உடல் எவ்வாறு சிறிது, சிறிதாக சிதைக்கப்படுகிறதோ, அதுபோல தமிழீழமும் சிதைக்கப்படுமென்பதை திலீபன் தன் உண்ணாநிலையின் மூலமாகக் காட்சிப்படுத்தினார். இவ்வாறான காட்சிப்படுத்தல் இதற்கு முன் எந்த ஒரு உண்ணாநிலைப் போராட்டத்திலும் நடந்ததில்லை. அனைத்தும் மக்கள் முன்பு நிகழ்த்தப்பட்டது.

எளிய கோரிக்கைகளுக்காக, நிறைவேற்றப்படக்கூடிய கோரிக்கைகளுக்காக, வாக்குறுதி கொடுக்கப்பட்டவற்றை நிறைவேற்று எனும் கோரிக்கைக்காக உறுதியோடு போராடினால் மரணத்தையே இந்திய அரசு பரிசாகத் தருமென்பதை திலீபன் எனும் ஒற்றைத்தமிழன் நிரூபித்துக் காட்டினான். இராணுவம் என்பது அரசியல் - அதிகார வர்க்கத்தின் ஆதிக்கக் கருவி என்பதை செயலற்று நின்றுபோன இந்திய இராணுவத்தினைச் சுட்டிக்காட்டினார் லெப்.கேணல் திலீபன். மக்கள் இராணுவமே மக்களுக்காகப் போராடுமென்பதையும், அரசின் இராணுவம் ஆதிக்க நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படுமெனும் அரசியல் பாடத்தை நல்லூர் திடலில் விடுதலைப் புலிகள் நடத்தினார்கள்.

ஒரு பேரரசின் இராணுவத்தை எதிர்த்துப் போர் புரியவேண்டி இருக்கும் எனும் அறத்தை திலீபனின் போராட்டம் மக்களுக்கு உணர்த்தியதே இப்போராட்டத்தின் மாபெரும் அரசியல்-வரலாற்று வெற்றி. இதன் பின்னர் தமிழீழ நிலம் இந்தியப் படைகளை அடித்துவிரட்டும் ஓர்மைக்குள் வந்தடைந்தது. விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டின் அறத்தை அறிந்த மக்கள் பிற போராட்ட குழுக்களிடமிருந்து விலகி புலிகளின் பின்னே அணிதிரண்டார்கள். இப்படியான மக்கள் திரட்சியை எதிர்கொள்ளும் வலிமை இந்திய அரசிற்கு மட்டுமல்ல, உலகின் எந்தப் பேரரசிற்கும் சாத்தியமில்லை என்பதை வியட்நாம் ஏற்கனவே உணர்த்தியிருந்ததை ஏற்காத வீணர்கள் தம் படையினரை தம் அதிகார வெறிக்காக பலி கொடுத்ததை உலகம் கண்டது.

அதனால் தான் இந்தியாவின் அமைதிகாப்புப் படை எனும் ஆதிக்கப் போர் 'இந்தியாவின் வியட்நாம்' எனப்பட்டது. அவமானத்தின் உச்சிக்குச் சென்ற இந்திய பார்ப்பனீய அதிகாரவர்க்கம் சூழ்ச்சியால் மட்டுமே தமிழர்களையும், புலிகளையும் வெல்ல முடியுமென்பதை 2009 தமிழினப்படுகொலை சுட்டிக்காட்டியது. ஆனால், தமிழீழத்தில் எதிர்கொண்ட அவமானத்திற்குப் பின்னர் இந்திய பார்ப்பனீய அரசு இதன் பின்னரான கடந்த 33 வருடங்களில் ஆதிக்கத்திற்காக தனது இராணுவத்தை அனுப்பத் தலைப்படவில்லை என்பதுவும் திலீபன் ஈட்டிய பெருவெற்றியின் அடையாளம்.

மக்களை அரசியல்படுத்தாமல் போராட்டமில்லை, போராட்டமில்லாமல் சுயமரியாதையில்லை. சுயமரியாதையில்லாமல் விடுதலை என்பது உத்திரவாதமில்லை. இப்பாலபாடத்தை தம்மை அழித்து தமிழர்களுக்கு போதித்தவர் லெப். கேணல் திலீபன் எனும் பெருங்காட்டை அழித்த நெருப்பின் துளி.

தெற்காசியாவின் மாபெரும் அரசியல்-சமூக-பொருளியல் ஆற்றல் தமிழ்ப் பேரினம்.

இதை மீண்டுமொரு முறை நினைவுபடுத்தவே இந்நாளை திலீபனின் வீரவணக்க நாளாக நினைவு கூருவோம்.

- மே பதினேழு இயக்கம் -

## நக்கல் நமசிவாயம்

**முதலில போன வெளிநாட்டுப் பயணம் மகாராணி சாவு வீடு... ரெண்டாவது வெளிநாட்டுப் பயணம் ஜப்பான் பிரதமர் செத்த வீட்டு நிகழ்வு... ஏதாவது சுபகாரியங்களுக்குப் போகமாட்டாரோ ரணில் ஐயா..?**



## இன்றைய நாளில்...

- ★ கிமு 46 – ஜூலியஸ் சீசர் தனது தொன்மக் கடவுள் வீனஸுக்குக் கோயில் ஒன்றைக் கட்டினார் .
- ★ 1580 – சேர் பிரான்சிஸ் டிரேக் உலகைச் சுற்றி வந்தார்.
- ★ 1905 – ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் தனது சிறப்புச் சார்புக் கோட்பாடு தொடர்பான முதலாவது ஆய்வை வெளியிட்டார்.
- ★ 1959 – முதல் நாளில் சுடப்பட்டுப் படுகாயமடைந்த இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க இறந்தார்.
- ★ 1987 – தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் லெப்டினன்ட் கேணல் திலீபன் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து 12 நாட்கள் நீரும் அருந்தா உண்ணா நோன்பு இருந்து உயிர்துறந்தார்.
- ★ 2008 – சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த இவெஸ் ரொசி ஆங்கிலக் கால்வாயை ஜெட் இயந்திரம் பூட்டப்பட்ட இறக்கை மூலம் கடந்த முதலாவது மனிதர் என்ற சாதனையைப் படைத்தார்.

# முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை ஆராயும் மையமாக செயல்படுவோம்

## கம்பஹா புத்திஜீவிகள் அமைப்பின் ஒன்றுகூடலில் தீர்மானம்



(எம்.நசார்)

கம்பஹா புத்திஜீவிகள் அமைப்பு, கொழும்பு மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் நேற்று (25) ஒன்றுகூடியது.

முஸ்லிம் சமய, கலாசார, பண்பாட்டு அமைச்சு தொடர்பிலும் இன்னும் முஸ்லிம் மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் ஒன்றுகூடி ஆராய்ந்தது.

முன்னாள் கொழும்பு மாநகர சபை முதல்வரும், இலங்கைக்கான முன்னாள் சவூதி அரேபிய துதுவராகக் கடையாற்றியவருமான அல்-ஹாஜ் ஹுசைன் முஹம்மத் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் முஸ்லிம் திணைக்கள கட்டடம் தொடர்பில் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாக கலந்துரையாடியதுடன், கட்டடத்தில் முஸ்லிம் கலாசார விடயங்கள், முஸ்லிம் நூலகம், முஸ்லிம் மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை ஆராய்வதற்கான ஒரு மையமாக வும் செயல்பட திட்டமிட்டுள்ளதாக எடுத்துக்கூற முடிவெடுக்கப்பட்டது.

மேலும் கம்பஹா, கொழும்பு, களுத்துறை ஆகிய மேல் மாகாணத்திற்குட்பட்ட மூன்று மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் தொடர்ந்தும் முஸ்லிம் சமூகம் தொடர்பில் இவ்வாறு மாதம் ஒரு முறை கூடி ஆராய்ந்து எமது பிரச்சினைகளை முடியுமான அளவு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண முயற்சி எடுக்கவேண்டுமென அல்-ஹாஜ் ஹுசைன் முஹம்மத்தின் ஆலோசனையை சகலரும் ஏற்றுக்கொண்டனர்.

அதற்காக மேற்படி நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ள அவர் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்தார் என அமைப்பின் கௌரவ செயலாளர் எம்.எம்.ஹஸன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை காலியிலும் முன்னெடுப்பு!









பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று முன்தினமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்று முன்தினம் (24) பயங்கர வாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை காலியில் மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட் டில் காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ முனீஸ்வரர் முத்துமாரியம்மன் தேவஸ்தான நவராத்திரி விழா நிகழ்வுகள்

கொழும்பு, ஜெம்பட்டா வீதி, இல 151/155 - தோட்டம், ஸ்ரீ முனீஸ்வரர் முத்து மாரியம்மன் தேவஸ்தான நவராத்திரி விழா 2022, நவா வர்ண ஸ்ரீ சக்கர பூஜை இன்று (26) முதல் அடுத்த மாதம் 05ஆம் திகதிவரை சாரதா நவராத்திரி விழாவும் நவாவரண ஸ்ரீ சக்கர பூஜையும் நவசக்தி மஹா ஹோமமும் தொடர்ந்து, 9 நாட்களுக்கு நடைபெறவுள்ளன.

தினமும், மாலை 3.30 மணிக்கு கும்ப பூஜை ஆரம்பமாகும். மாலை 4.30 மணிக்கு நவாவரண ஸ்ரீ சக்கர பூஜை, மாலை 6.30 மணிக்கு முத்தேவியர் ஹோமம், மாலை 7.00 மணிக்கு சாயரட்ச பூஜை, மாலை 7.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை விசேட தீபாராதனை நடைபெறும்.

எதிர்வரும் 05ஆம் திகதி காலை 8.00 மணிக்கு விசேட நவகலச அபிஷேகம் தொடர்ந்து வித்தியாரம்பம் ஏடு தொடக்குதல் நடைபெறும். மாலை 4.00 மணிக்கு மானம்பூ திருவிழா (வாழைவெட்டு) நடைபெறும் தொடர்ந்து பிரயச்சித்த அபிஷேகம் நடைபெறும்.

தைவி பூஜா ஸேவா துரந்தரர் ஜோதிடமணி விஸ்வ அபிமானி தேசபந்து ஆன்மீக ஜோதிட மணி சர்வதேச இந்துமத பீட இணைப்பாளர் கலாநிதி ஸ்ரீலஸ்ரீ செ.சிவநேச குருக்கள், அகில இலங்கை சமாதான நீதவான் ஸ்ரீ முனீஸ்வரர் முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதமகுரு ஆகியோர் இந்த பூஜை வழிபாடுகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

# சொத்து விபரங்களை வெளியிடாத எம்.பிக்கள் தாமாக முன்வந்து அறிவிக்க வேண்டும்

## ட்ரான்ஸ்பிரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் கோரிக்கை

முன்னாள் மற்றும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேர் இதுவரை தமது சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய பிரகடனங்களை வெளியிட்டுள்ளனர். எனவே, இதுவரை தமது சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றி பிரகடனங்களை வெளியிடாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாமாக முன்வந்து தமது சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய பிரகடனங்களை வெளியிடவேண்டுமென ட்ரான்ஸ்பிரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் கோரியுள்ளது.

அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முன்னாள் மற்றும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேர் இதுவரை தமது சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய பிரகடனங்களை பொதுவெளியில் வெளியிட்டுள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் வெளிப்படைத்தன்மையை நிரூபிப்பதில் சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய பிரகடனங்கள் ஒரு முக்கிய படியாகும்.

குறித்த பிரகடனங்கள் பொதுவெளியில் வெளியிடப்பட்ட பின்னர் பொறுப்புக் கூறக்கூடிய மக்கள் பிரதிநிதித்துவத்தைப் பேணுவது பொதுமக்களின் பொறுப்பு.

இதுவரை தமது சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றி பிரகடனங்களை வெளியிடாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாமாக முன்வந்து தமது சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய பிரகடனங்களை பொதுவெளியில் வெளியிடுமாறு நாம் மீண்டும் அழைப்பு விடுக்கின்றோம்.

அதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலசூரிய, ஹர்ஷ டி சில்வா, விமலவீர திஸாநாயக்க, விதுர விக்ரமநாயக்க, எம்.ஏ.சுமந்திரன், வாசுதேவ நாணயக்கார, தயாசிறி ஜயசேகர, எரான் விக்ரமரத்ன, அதுல விதானகே, லக்ஷ்மன் கிரியெல்ல, சிவஞானம் சிறிதரன், சுசில் பிரேமஜயந்த, மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சன் ராமநாயக்க, செய்ட் அலி சாஹிர் மௌலானா மற்றும் அசு மாரசிங்க ஆகியோர் தமது சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய பிரகடனங்களை வெளியிட்டுள்ளதாக அந்த நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# கணமூலை தெற்கு பிரிவில் சிறுவர் சங்க சித்திரப் போட்டி





(ரஸீன் ரஸ்மின்)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு முந்தல் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மங்கள எளிய சமுர்த்தி வங்கியின்கீழ் இயங்கும் கணமூலை தெற்கு சிறுவர் சங்க உறுப்பினர்களுக்கிடையிலான சித்திரப் போட்டி ஒன்று நேற்று முன்தினம் (24) நடைபெற்றது.

மங்கள எளிய சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்எம்.நபீலின் ஆலோசனையில் கணமூலை தெற்கு சிறுவர் சங்கப் பொறுப்பாளர்களான பாத்திமா சபியா மற்றும் எஸ்.எம்.ரிப்கா தலைமையில் கணமூலை தெற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் மேற்பார்வையில் இந்த சித்திரப் போட்டி நிகழ்ச்சி இடம்பெற்றது.

இதில் முதலாம் தரம் தொடக்கம் ஐந்தாம் தரம் வரை மற்றும் 06ஆம் வகுப்புமுதல் 10ஆம் வகுப்பு வரையும் என இரண்டு பிரிவுகளாக போட்டி நடத்தப்பட்டது.மேற்படி இரண்டு பிரிவினருக்கும் "ஒற்றுமையாக வாழ்வோம்" எனும் தலைப்பு ஏற்பாட்டுக் குழுவினரால் வழங்கப்பட்டது.

இந்த சித்திரப் போட்டியில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழுடன் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதுடன், போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

மேற்படி போட்டியில் வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கு எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் வணிகபீட 04ஆம் வருட மாணவர்களால் (23ஆவது படையணி ) மாபெரும் இரத்த தான முகாம் முகாமைத்துவப் பீடாதிபதி பேராசிரியர் பீ.நிமலதாசன் தலைமையில் நடைபெற்றது. தொடர்ச்சியாக ஆறு மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்த முகாமில் சுமார் 125 குருதிக் கொடையாளர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத் தக்கது. (படங்கள்: யாழ். செய்தியாளர்)

# இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈராக் தூதுவருடன் விசேட சந்திப்பு



இளைஞர் நாடாளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் ஆகியோர் இலங்கைக்கான ஈராக் நாட்டின் தூதுவர் முஹம்மத் உபைத் ஜாபரை சமீபத்தில் தூதரகத்தில் சந்தித்தனர்.

இச்சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள், அதில் பிரதானமாக இளைஞர்கள் முகங்கொடுக்கும் சவால்கள், மேலும் இளைஞர்களுக்கான வெளிவிவகார வாய்ப்புகள் மற்றும் அரசியல் துறையில் இன்றைய இளைஞர்களின் ஈடுபாடு, இளைஞர்களின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தலைமைத்துவம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் இக்கலந்துரையாடலின்போது ஈராக் நாட்டின் தூதுவர் குறிப்பிடுகையில்,

ஈராக் பழமை வாய்ந்த, சிறந்த கலாசாரம் கொண்ட ஒரு நாடாகும். அந்த நாடு முகங்கொடுத்த பிரச்சினைகளில் முதன்மையானது யுத்தமாகும். ஈராக் பூமிக்கு யுத்தம் பெரியதோர் அழிவை கொடுத்தது. ஈராக் நாடு, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டபோதிலும்கூட அது பழமை வாய்ந்த அழகிய தேசமாகத்தான் இன்றும் திகழ்கிறது. இதுவரையில் நிலையான அரசு ஒன்று ஈராக் நாட்டில் இன்னும் நிறுவப்படவில்லை. எதிர்காலத்தில் அதற்கான செயற்பாடுகள் நடைபெறும் எனவும் இளைஞர்கள் அவர்களுடைய பங்கை நாட்டுக்காக செய்துகொண்டிருக்கிறார்கள் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், எதிர்காலத்தில் இலங்கையில் இளைஞர்கள் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் பின்னர், இரு நாடுகளினதும் உறவு, இளைஞர்களின் ஊடாக மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர்.


திகதி 24.09.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4888
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,678,270.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 6 1 0 4 2 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,438,005.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3130
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,252,180.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 50 64 77 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,799,782.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1343
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,763,320.00
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 1 7 1 7 1 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,037,534.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 918
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,543,140.00
வெற்றி இலக்கினம் S வெற்றி இலக்கங்கள் 06 10 24 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 126,883,517.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 197
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,917,920.00
இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 23 38 52 59
விசேட இலக்கினம் மிதுனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,524,484.40

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1236
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,212,540.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 272,238,906.00
S 26 27 55 59 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத், கொழும்பு 01

திகதி 23.09.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4887
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,154,440.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 5 0 3 8 3 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,831,325.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3129
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,297,780.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 07 24 36 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,684,253.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1342
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,935,100.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 4 0 5 6 6 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,991,067.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 917
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,449,640.00
வெற்றி இலக்கினம் E வெற்றி இலக்கங்கள் 07 11 63 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 126,785,864.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 196
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,638,018.40
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 04 09 52 59
விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1235
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,264,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 272,030,474.00
A 11 06 36 55 70
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத், கொழும்பு 01

## சம்பூர் காட்டுப் பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்பு



(எப்.ஆர்.எம்.பர்ஹான்)

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீதனவெளிப் பகுதியில் இறந்த நிலையில் சடலம் ஒன்று நேற்று முன்தினம் (24) கண்டெடுக்கப்பட்டுள்ளது.

காட்டிற்கு விறகு எடுக்கச்சென்ற ஒருவர் இறந்த நிலையில் சடலம் ஒன்று கிடப்பதைக் கண்டு, சம்பூர் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பூர் பொலிஸார் அவ்விடத்திற்கு வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்டனர்.

அதனையடுத்து மூதூர் பதில் நீதவான் மற்றும் சம்பூர் வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் அவ்விடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டதுடன், சடலத்தை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தனர்.

இறப்பு தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வொலிவேரியன் கிராமத்துக்கு மையவாடி; பிரதேச செயலாளருக்கு மகஜர் கையளிப்பு



(நூருள் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வொலிவேரியன் கிராமத்துக்கான மையவாடியை அமைத்துத் தர உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி பிரதேச செயலாளருக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களால் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

லக்ஸ்டோ மீடியா ஊடக வலையமைப்பின் முன்னெடுப்பில் நேற்று முன்தினம் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு நேரில் சென்று முறைப்பாடு மேற்கொண்டனர்.

பொதுநல செயற்பாட்டாளரும், பல்துறை கலைஞரும், வொலிவேரியன் கிராமத்தைச் சேர்ந்தவருமான அஹமட் லெப்பை அன்ஸார் தலைமையில் சென்ற இவர்கள் உதவிப் பிரதேச செயலாளரை சந்தித்துப் பேசினர்.

வொலிவேரியன் கிராமத்தில் மையவாடி அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து பிரதேச செயலாளராக ஏ.எல்.எம். சலிம் பதவி வகித்தபோது ஒதுக்கி கொடுக்கப் பட்ட இடத்தில் தற்போது மடுவம் அமைக்க சில முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன, இதை அனுமதிக்கக்கூடாது என்று உதவிப் பிரதேச செயலாளருக்கு அன்ஸார் எடுத்துச் சொன்னார்.

பிரதேச செயலாளரின் சார்பாக உதவிப் பிரதேச செயலாளர் மகஜரை பெற்றுக்கொண்டார்.

## போடியார் புலம்பல்!



**உள்ளூராட்சி தேர்தல் கெதியா நடக்குமாம் எண்டு தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் முந்தநாள் சொல்லியிருக்காரு எலுவா.?**

**அப்ப இனி ஊரெல்லாம் அரை அமைச்சர், முக்கால் அமைச்சர், முழு அமைச்சர்மாரிட வாகனங்கள காணலாம் போல.**

**கையில காசி இல்லாட்டியும் வாயால நல்லா வட சுடுவாங்க.! அதுசரி கிழக்க மேய்க்க எண்டு இராஜாங்க அமைச்சரானவங்க திருகோணமல கோணேசர் கோயிலப்பற்றி வாய்துறக்கல்ல இந்த எருமை மாடுகள். ஒருவேள அது வடக்கு எண்டு நினைச்சுத்தாங்கலோ?**

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

## மோட்டார்சைக்கிள், 23ஆயிரம் ரூபா பணம் மீட்பு



(பாறுக் ஷிஹான்)

ஹெரோயின் போதைப் பொருளை மோட்டார்சைக்கிளில் கடத்திச்சென்ற சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை (23) மாலை நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதி செயின் வீதி சந்தியில் வைத்து சந்தேகநபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.


இவ்வாறு கைதான நபர், நிந்தவூர் 09 பிரிவைச் சேர்ந்த 18 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேகநபரிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் 04 கிராம் 200 மில்லிகிராம், சந்தேக நபர் செலுத்திவந்த ஹொன்டா ரக மோட்டார்சைக்கிள், 23 ஆயிரம் ரூபா பணம் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையின்போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.சி.வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க மேற்பார்வையில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.பி.பி.எம்.டயஸ் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட்களான பண்டார (13443), வீரகோன்(33354), பொலிஸ் கான்ஸ்டபிள்களான பெரேரா (71664), அபேரட்ன (75812), நிமேஸ் (90699), சாரதி ஜெயரட்ன (19786), அதிகாரிகள் ஆகியோர் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைதுசெய்தனர்.

பின்னர் கைதுசெய்யப்பட்ட நபர்கள் சான்றுப் பொருட்களுடன் நிந்தவூர் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## கன்னியா சிறுபிட்டி குளத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு



(அப்துல்சலாம் யாசீம்)

கன்னியா சிறுபிட்டி குளத்தில் மிதந்து கிடந்த நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று முன்தினம் (24) மாலை 5.00 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் யாருடையதென அடையாளம் காணமுடியாத நிலையில் உருக்குலைந்துள்ளதுடன், குறித்த சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சடலம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# இன ஒற்றுமையை பாதிக்கின்ற காணி அபகரிப்பை உடனடியாக நிறுத்தவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் வலியுறுத்து



(அப்துல்சலாம் யாசீம்)

நாட்டில் சிலர் வீரப்பேச்சுகளை பேசித்திரிந்தாலும் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாகவும், பொருட்களுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும், சில பொருட்கள் மாபியா அடிப்படையில் விற்கப்படுவதாகவும், தற்போது வைத்தியசாலைகளில் மருந்துப்பொருட்கள், ஏனைய வசதிகள் பற்றாக்குறையாக காணப்படுவதால் மக்கள் தனியார் வைத்தியசாலையை நோக்கி செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக மக்கள் பாரியளவில் கஷ்டப்படுவதாகவும் அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது இம்ரான் மஹ்ரூப் எம்.பி. தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், தற்போது மக்கள் பல துன்பங்கள், துயரங்கள் அடைந்துள்ள சந்தர்ப்பத்தில் திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூர் பிரதேசத்திற்குட்பட்ட இக்பால் நகர், உல்லைக்குளம் காணி களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் இன ஒற்றுமையை பாதிக்கின்ற வகையில் காணிப் பிரச்சினைகளை உருவாக்கி இனப் பிரச்சினைகளை உருவாக்க சில நாசகார சக்திகள் முயற்சிப்பதாகவும் அது உடன் நிறுத்தப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும், குச்சவெளி பிரதேசத்திற்குரிய சில காணிப் பரப்புகளை கோமரன்கடவல பிரதேசத்திற்கு உள்வாங்குவதாக சொல்லி சில அதிகாரிகள் அளவிட அந்த இடங்களில் வருகின்றபோது மக்களுக்கிடையில் பிரச்சினை உருவாகுவதாகவும் இந்த நாடு சென்று கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இன ஒற்றுமையை பாதிக்கின்ற செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும் எனவும் அதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# அக்கரைப்பற்றில் வாழ்வாதார உதவியாக 1800 கோழிக்குஞ்சுகள் வழங்கிவைப்பு



(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 2021ஆம் ஆண்டிற்கான அருனலு வாழ்வாதார அபிவிருத்தி உதவி வேலைத்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சாரின் வழிகாட்டலின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு முதலாம் கட்டமாக 1800 சிறந்த இன கோழிக்குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்.ஹுசைன் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்சா, கால்நடை வைத்திய அதிகாரி எம்.ஐ.றிப்கான், கருத்திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், வங்கிச் சங்க முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மதுல்லாஹ், வலய முகாமையாளர் யூ.கே.எம்.நழீம், கருத்திட்ட உதவியாளர் எம்.ஐ.முஹாஜீர், வலய உதவியாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

# திட்டமிடப்படாமல் வெளியேற்றப்படும் கழிவுகளால் உயிரினங்களுக்குப் பாதிப்பு

## அரசாங்க அதிபர் ஜயவிக்ரம தெரிவிப்பு





(கந்தளாய் நிருபர்)

திட்டமிடப்படாத முறையில் வெளியேற்றப் படுகின்ற கழிவுகள் காரணமாக மனிதர்கள் மாத்திரமல்ல, உயிரினங்களும் பாதிப்புக்கு உட்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார்.

சமுத்திர வளங்கள் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை (23) திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அரசாங்க அதிபர் மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

திருகோணமலை நகர்சார் பிரதேசங்களில் கழிவுகள் வகைப்படுத்தி வெளியேற்றப்படாததன் காரணமாக அழகிய நகர்ப் பிரதேசம் பல சுற்றாடல் பாதிப்புகளை எதிர்நோக்கவேண்டிய நிலைக்கு உட்பட்டுள்ளது. எனவே, தங்களுடைய வீடுகளில் வெளியேற்றப்படுகின்ற கழிவுகளை வகைப்படுத்தி அவற்றை வழங்குவதன் மூலம் நகரின் எழில் கெடாமல் பாதுகாக்க முடியும். நகரின் எழில் பாதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் துர்நாற்றம் வீசுவதுடன், அது விரும்பத்தகாத ஒரு செயற்பாடாகவும் அமையும். எனவே, தங்களுடைய நகரைத் தூய்மையாக வைத்திருப்பதற்கு அனைவரும் தங்களுடைய செயற்பாடுகளை பொறுப்புணர்வுடன் மேற்கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் வீடுகளில் வெளியேற்றப்படுகின்ற கழிவுகளை வகைப்படுத்தி வழங்குவதற்காக திருகோணமலை நகரசபையால் வேறுபடுத்தப்பட்ட பொதிகள் தங்களுக்கு வழங்கப்படும். அவற்றில் உரிய கழிவுப்பொருட்களை சரியாக வகைப்படுத்தி நகரசபையினருக்கு வழங்குவது தங்களுடைய பொறுப்பாக அமையும். இதன்மூலம் சுற்றாடலில் கழிவுகள் ஒழுங்கற்ற முறையில் வெளியேற்றப்படலை கட்டுப்படுத்தக்கூடியதாக அமையுமென்று மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

திருகோணமலை நகர சபையின் அனுசரணையில் திருகோணமலை நகரசபை பிரதேசத்திற்குட்பட்ட பொதுமக்களுக்கு கழிவுகளை வகைப்படுத்தி வழங்குவதற்காக வெவ்வேறு நிறங்களிலான உரப் பைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதனொரு அங்கமாக இந்நிகழ்வு இன்று திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட மனையாவெளிப் பிரதேச பொதுமக்களுக்கு இந்தப் பைகள் வழங்கப்பட்டன.

ஏற்கனவே இந்த வேலைத்திட்டம் திருகோணமலை தில்லைநகர் கிராமசேவகர் பிரிவில் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மக்கள் இச்செயற்பாட்டை முக்கிய ஒரு செயற்பாடாகக் கருதி நடைமுறைப்படுத்துவதன் மூலம் கழிவகற்றல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை எட்டக்கூடிய சந்தர்ப்பம் காணப்படும்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், நகரசபை உறுப்பினர்கள், திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி கே.விஜயகுமார், திருகோணமலை நகரசபை செயலாளர், கரையோரம் பேணல் மற்றும் கரையோரம் மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# கல்முனையில் தேசிய மரநடுகை







(கல்முனை நிருபர்)

"சமுர்த்தி பசுமை நிற தாயக அறுவடை "தேசிய மரநடுகை தின சுற்றாடல் வேலைத் திட்டத்தின் மரநடுகை வாரத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டன.

கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் கல்முனைக்குடி சமுர்த்தி வங்கி வலயத்தின் மரநடுகை நிகழ்வுகள் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி வழிகாட்டலில், கல்முனை சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹின் நெறிப்படுத்தலில், கல்முனைக்குடி சமுர்த்தி வங்கி வலயத்தின் சமுர்த்தி முகாமையார் மோசஸ் புவிராஜ் தலைமையில் கல்முனைக்குடியின் 16 கிராமசேவகர் பிரிவுகளில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமூக மட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள், மற்றும் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# நிவித்திகலை நிரியெல்லை தமிழ் வித்தியாலயத்தில் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் அணிவிப்பு






















இரத்தினபுரி நிவித்திகலை நிரியெல்லை தமிழ் வித்தியாலயத்தின் மாணவர் தலைவர்கள் மற்றும் வகுப்புத் தலைவர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு, கடந்த 23 ஆம் திகதி பாடசாலையின் அதிபர் ஜி.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. உப அதிபர் ஜி.தேவசீலனின் வழிகாட்டலில் விழா ஏற்பாட்டுப் பொறுப்பாசிரியர் எம். சசிகுமார் மற்றும் ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக வலயக்கல்வி ஆசிரியர் ஆலோசகர்கள், அயற்பாடசாலைகளின் அதிபர்கள், தோட்ட முகாமையாளர், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## தியாக தீபத்தை நினைவுகூர்ந்து அடையாள உண்ணாவிரதம்






(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில், நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் அடையாள உண்ணாவிரதம் நேற்றுக் காலை 08 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெற்றது.

தியாக தீபத்தின் நினைவேந்தல்கள் நடைபெற்றுவரும் நிலையில், இன்று திங்கட்கிழமை இறுதிநாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில், நேற்று அடையாள உண்ணாவிரதத்தில் பலர் கலந்துகொண்டு உண்ணா நோன்பு இருந்தனர்.

அதேவேளை, இன்று திங்கட்கிழமை பல பாகங்களிலிருந்தும் ஊர்திகள் பவனி வரவிருக்கின்றன. அனைத்து ஊர்திகளும் காலை 10 மணிக்கு முன்பதாக நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்தை வந்தடையும். தியாக தீபம் திலீபனின் உயிர் பிரிந்த 10.48 மணிக்கு மலரஞ்சலி இடம்பெறவிருக்கின்றது. இதன்போதும் மக்கள் பெரும் எழுச்சியாக வரவேண்டும். வாகன ஊர்திகள், தூக்குக்காவடிகளை எங்கள் உறவுகள் காலையிலிருந்து அவற்றைக் கொண்டுவரலாம்.

தியாகதீபம் திலீபன் பிறந்த ஊரெழுவிலிருந்து ஊர்தி நல்லூர் நினைவாலயத்தை நோக்கி வந்தடையவிருக்கின்றது. இந்த ஊர்திகளுடன் இணைந்து பயணித்துக்கொண்டு பொதுமக்கள் வரவேண்டும் என நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

## கொடிகாமம் ரயில் விபத்தில் சிக்கிய இளைஞனுக்கு உதவிக்கரம்



(யாழ். நிருபர்)

சில மாதங்களுக்கு முன்னர் தந்தையும், இரண்டு பிள்ளைகளும் யாழ். தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் நடந்த ரயில் விபத்தில் சிக்கி ஒரு பிள்ளை உயிரிழந்த நிலையில், மற்றொரு பிள்ளையான இளைஞன் தற்போதுவரை கோமா நிலையில் காணப்படுவதால், அவருக்குத் தேவையான விசேட மருத்துவக் கட்டிலை வாங்கித் தருமாறு யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கமைய காலமான அபிராமி முருகானந்தம் நினைவாக பிரான்ஸில் வசிக்கும் அவருடைய தாயாரினால் வழங்கப்பட்ட நிதி உதவியில் குறித்த கட்டில் கொள்வனவு செய்யப்பட்டு, கடந்த சில தினங்களுக்கு முன்னர் நேரடியாகக் கையளிக்கப்பட்டது.

## தாய்ப்பால் புரையேறி 10 மாதக் குழந்தை யாழில் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் பகுதியில் பால் புரையேறியதில் 10 மாதக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை குழந்தைக்கு பால் கொடுத்தபோது பால் புரையேறியதில் குழந்தைக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து பெற்றோர் அம்பன் வைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டுசென்று, பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது குழந்தை உயிரிழந்துள்ளதென வைத்தியர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

## 'சிங்கள டிப்ளோமா கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு' யாழில்






(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் "சிங்கள டிப்ளோமா கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு" மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்று முன்தினம் (24) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தினால் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கு ஒரு வருட காலத்தினை உள்ளடக்கியதாக இச்சிங்கள டிப்ளோமா கற்கைநெறி முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கும்போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் சிங்களமொழியை கற்பதில் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் ஆர்வம் காட்டுகின்றார்கள். பல அரச திணைக்களங்களில் சிங்கள மொழிபெயர்ப்பாளர்களின் தேவை காணப்படுகிறது. இச்சிங்களமொழி டிப்ளோமா கற்கைநெறியின் மூலம் இத்தேவைகள் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்நிகழ்வில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரசாத் ஆர்.ஹேரத், மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், உதவிப் பணிப்பாளர் திருமதி பி.பி.ரவிராஜ் (NILET), கற்கை மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் திருமதி எல்.எம்.ஆர்.என்.லன்சாகர (NILET), இணைப்பாளர் எச்.எ.எச்.ஹெரோசிமா பெரேரா( NILET) மற்றும் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட செயலக இணைப்பாளர் (NILET), விரிவுரையாளர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

# "நெருக்கடியான நேரங்களில் பொருளாதாரத்தை ஆதரிக்கும் திறன் எங்களிடம் உள்ளது"

இலங்கையின் தற்போதைய நெருக்கடியான பொருளாதாரப் பின்னணியின்போதும், கடந்த ஜூலை மாதம் நாட்டின் வர்த்தக இருப்பானது வியக்கத்தக்க விதத்தில் பதிவுசெய்யப்பட்டது. இந்த சாதனைப் புள்ளிவிவரம், இறக்குமதிச் செலவுகளில் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதையும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆடைத்துறையின் தொடர்ச்சியான பங்களிப்பையும் பிரதிபலிக்கிறது.

இந்த வாரம் Shippers' Academy ஏற்பாடு செய்த நிகழ்வொன்றில், கூட்டு ஆடை சங்கங்கள் மன்றத்தின் (JAAF) செயலாளர் நாயகம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, சர்வதேச சந்தைகளுக்கான இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட அணுகலை ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும் முயற்சிகள் குறித்து பதிலளித்தார். ஆடைத் தொழில் துறைக்கு தனது ஆதரவையும் பொருளாதாரத்திற்கு தொழில்துறையின் பங்களிப்பையும் வெளிப்படுத்திய அவர், இது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகக் கூறினார்.

இலங்கையின் ஆடை ஏற்றுமதியின் செயற்திறனை நிலைநிறுத்துவதற்கு வர்த்தக உடன்படிக்கைகள் இன்றியமையாதவை என JAAF இன் செயலாளர் நாயகம் யொஹான் லோரன்ஸ் வலியுறுத்தினார்.

பிரிட்டனின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தினால் (DCTS) இலங்கை பயனடையும் மற்றும் ஆடைத் தொழில்துறையானது 2023 டிசம்பருக்குப் பின்னும் GSP+ ஐத் தக்கவைத்துக்கொள்வதன் முக்கியத்துவத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. GSP+ திட்டங்களின் அடிப்படையில், தைத்த ஆடைகளுக்காக Rules of Origin கீழ் உள்ள கட்டுப்பாடுகள் காரணமாக சுமார் பாதி ஆடைகள் மட்டுமே தகுதி பெறுகின்றன, அதாவது, SAARC நாடுகளின் ஆடைகளுக்கு மட்டுமே Cumulation அனுமதிக்கப்படுகிறது. JAAF இந்தத் தடையை முன்னிலைப்படுத்தியுள்ளது மற்றும் GSP திட்டத்தின் எதிர்கால மறுசெய்கைகளில் இந்த விடயத்தை கவனித்துக் கொள்ளுமாறு கோரியுள்ளது.

## டயலொக் ஆசிஆட்டா குழுமம் இலங்கையில் 152.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவுள்ளது



இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் (BOI) இயங்கும் மிகப்பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டாளரான (FDI) டயலொக் ஆசிஆட்டா குழுமம், இலங்கையின் தொலைத்தொடர்பு மற்றும் ICT உட்கட்டமைப்பிற்கு 152.4 மில்லியன் அமெரிக்க டொலர் மேலதிக முதலீட்டிற்காக ICT உடன் இரண்டு துணை உடன்படிக்கைகளில் இணைவதாக 2022 செப்டெம்பர் 13 அறிவித்ததுள்ளது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியிலிருந்து 112.8 மில்லியன் அமெரிக்க டொலரும் மற்றும் அதன் துணை நிறுவனமான டயலொக் புரோட்பாண்ட் நெட்வர்க் (பிரைவேட்) லிமிடெட்டிலிருந்து 39.6 மில்லியன் அமெரிக்க டொலரும் இதற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது

இந்த ஒப்பந்தங்கள், டயலொக் ஆசிஆட்டா குழுமத்தின் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மேம்பாட்டின் ஒரு பரந்த நோக்கத்தை உள்ளடக்கியது,

கிராமப்புற மற்றும் ஆழமான உட்புற கவரேஜ், டேட்டா பகுப்பாய்வு மற்றும் வாடிக்கையாளர் தொடர்பு திறன்களை மேம்படுத்துதல், மொபைல் மற்றும் நிலையான 4G-LTE வலையமைப்புகளின் விரிவாக்கங்கள் IP மற்றும் ஃபைபர் வலையமைப்புகளின் பரிணாமம் மற்றும் குழுவின் Wi-Fi மற்றும் புரோட்பாண்ட் வலையமைப்புகளின் வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியது.

## ஹேமாஸ் குழுமத்தின் சூழல் நிகழ்ச்சிநிரல் 2030 அறிமுகம்
## இலங்கையின் அரிய உயிரினங்களைப் பாதுகாக்க தன்னை அர்ப்பணித்துள்ளது




பொறுப்புவாய்ந்த கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில், இலங்கைக்கு பிரத்தியேகமான அம்சங்களை பராமரித்துப் பேணவேண்டிய உறுதியான நம்பிக்கையுடன், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, தனது குழுமத்தின் சூழல் நிகழ்ச்சிநிரல் 2030 'ஹரித மெஹெவர' என்பதை அறிமுகம் செய்துள்ளது. நாட்டின் அரிய உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான இடையீடுகள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நீண்டகால அர்ப்பணிப்பாக இது அமைந்துள்ளது.

சர்வதேச உயிரியல் பரம்பல் மையமாக அமைந்துள்ள இலங்கையில், 350இற்கும் அதிகமான அரியவகை உயிரினங்கள் காணப்படுகின்றன.

இவற்றில் தாவரங்களும் விலங்குகளும் அடங்குகின்றன. எவ்வாறாயினும், மனிதனின் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை காரணமாக, இந்த அரிய வகை விலங்குகள் மற்றும் தாவரங்கள் பெரும் இடர்களுக்கு முகங்கொடுத்துள்ளன.

குழுமத்தின் அர்ப்பணிப்பு தொடர்பில் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் கருத்துத் தெரிவிக்கையில், "உண்மையில் இலங்கையின் நிறுவனம் எனும் வகையில்,இலங்கைக்கு உரித்தான அனைத்து உயிரினங்களையும் பராமரித்துப் பாதுகாக்கவேண்டும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அதனூடாக எதிர்காலத் தலைமுறையினருக்கும் நாம் கொண்டுள்ள இந்த செழுமையான சூழல் கட்டமைப்பின் பயனைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். எமது சூழல்சார் நிகழ்ச்சிநிரலினூடாக, விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் பங்காண்மைகளினூடாக சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல், இயற்கை வளங்களை பொறுப்பு வாய்ந்த வகையில் பயன்படுத்தல், எமது செயற்பாடுகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் சூழலுக்கு ஆபத்தான பிளாஸ்ரிக் பயன்பாட்டை குறைத்தல் போன்றவற்றை முன்னெடுப்போம். இலங்கையில் பாதிப்புறக்கூடிய உயிரினங்களைப் பாதுகாக்கும் வகையில் எமது சகல இடையீடுகள் மற்றும் செயற்பாடுகள் அமைந்திருப்பது எமது எதிர்பார்ப்பாகும்" - என்றார்.

# வணிக உலகம் Business world

www.thamilan.lk

## Colombo City Centre தனது நான்காவது ஆண்டுவிழாவை கொண்டாடியது




Colombo City Centre அதன் நான்காவது ஆண்டுவிழாவை செப்டெம்பர் 19 ஆம் திகதி கொண்டாடியதோடு, அதற்காக பல சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆண்டுவிழாவுக்கு முந்தைய வார இறுதியில், ஏராளமான மக்கள் CCC க்கு வருகை தந்ததோடு, அவர்கள் குடும்பத்துடன் மிகவும் மகிழ்ச்சியாக பொழுதை கழித்தனர். இங்குள்ள விற்பனை நிலையங்களில் பிரத்தியேக ஆண்டுவிழா சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

4 வருட வெற்றிகரமான பயணத்தை நினைவுகூரும் வகையில் 4ஆவது ஆண்டுவிழாவை திருவிழாவாக CCC கொண்டாடியதோடு, அதற்கான ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. CCC நிர்வாகம் மற்றும் இங்குள்ள விற்பனை நிலைய உரிமையாளர்கள் உத்தியோகபூர்வமாக கேக் வெட்டும் நிகழ்வில் பங்குபற்றியதோடு, வணிக நிலையங்களை நடத்தும் சமூகத்தினருக்கு கடந்த 4 ஆண்டுகள் அவர்கள் வழங்கிய பங்களிப்பிற்காக சிறப்பு பாராட்டுகள் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டுவிழாவுடன் இணைந்து செப்டெம்பர் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் ஆண்டுவிழா கருப்பொருளின்கீழ் ஒவ்வொரு 4 மணி நேரத்திற்கு ஒருமுறை சீட்டிழுக்கப்பட்டு 4 அதிர்ஷ்டசாலிகளுக்கு மதிப்புமிக்க பரிசுகள் வழங்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்களுக்கு செப்டெம்பர் 19, 2022 திங்களன்று அவர்களுக்குரிய பரிசுகள் வழங்கப்பட்டன. செப்டம்பர் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை "En Route" வழங்கிய Jazz இசையை ரசித்தவாறே Playtrix இல் ஆடம்பர உணவை சுவைக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும், இதில் கலந்துகொண்ட அனைத்து பெண்களுக்கும் ஞாயிற்றுக்கிழமை மாலைவேளையில் Playtrix இலவசமாக இனிப்பு வழங்கியது. ஆண்டு விழா நிமித்தம் அநேகமான கடைகள் சிறப்பு தள்ளுபடிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கின.

## 25 வருட காலமாக "ஒன்லைனில் நற்செய்தி!"




"JW.ORG" - கடந்த 25 ஆண்டுகளாக இன்டர்நெட்டில் வலம் வரும் பிரபலமான வெப்சைட்டாகும். ஜனவரி 15, 1997இல் இந்த வெப்சைட், ஆரம்பிக்கப்பட்டபோது WATCHTOWER.ORG என்று அழைக்கப்பட்டது. 'ஒன்லைனில் நற்செய்தியை' அறிவிப்பதே இந்த வெப்சைட்டின் நோக்கம். அன்று முதல், இந்த வெப்சைட்டிலிருந்து பல வகையான துண்டுப்பிரதிகளை, சிறு புத்தகங்களை, காவற்கோபுர மற்றும் விழித்தெழு கட்டுரைகளை யார் வேண்டுமென்றாலும் டவுன்லோட் செய்துகொள்ள முடிந்தது.

1999ல் JW-MEDIA என்ற ஒரு புதிய வெப்சைட் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த வெப்சைட் ஊடகங்களுக்கு யெகோவாவின் சாட்சிகளை பற்றிய துல்லியமான தகவல்களை வழங்கியது. யெகோவாவின் சாட்சிகளுக்கு கிடைத்த சட்டரீதியான அங்கீகாரங்கள் மற்றும் சாட்சிகளால் நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் இதில் வெளியிடப்பட்டது.

2005இல் JW.ORG என்ற புதியதொரு வெப்சைட் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த வெப்சைட்டில் இருந்து அனைவரும் ஒருசில பிரசுரங்களையும், ஆடியோ/வீடியோ பதிவுகளையும் டவுன்லோட் செய்துகொள்ள முடிந்தது. 2012இல் இந்த மூன்று வெப்சைட்களும் JW.ORG என்ற ஒரே பெயரில் ஒன்றிணைக்கப்பட்டன.

## ஊழியர்களுக்கு பொழுதுபோக்கு நிலையத்தை SLT-MOBITEL அறிமுகம் செய்துள்ளது

ஊழியர்களை ஊக்குவித்து ஈடுபாட்டைப் பேணும் நோக்குடன், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, தனது பல்நோக்கு பொழுதுபோக்கு நிலையத்தை கட்டான, பொத்தோடே பகுதியில் அண்மையில் நிறுவியுள்ளது.

SLT-MOBITEL இன் உரிமையாண்மையின் கீழான பகுதியில் இந்த பொழுதுபோக்கு நிலையம் அமைந்துள்ளது. இரண்டு ஏக்கர் பகுதியில் அதிகாரிகளுக்கான தங்குமிடப் பகுதி மற்றும் 40 பேர்ச் பகுதியில் பரந்த விளையாட்டு மைதானம் ஆகிய இரு பகுதிகளை இந்த நிலையம் கொண்டுள்ளது. 1.75 ஏக்கர் பகுதியில் சிற்றூழியர்களுக்கான தங்குமிட வசதிகளையும் கொண்டுள்ளது. முன்னர் இந்தப் பகுதி, SLT அதிகாரிகளின் தங்குமிடமாக காணப்பட்டதுடன், தொற்றுப்'பரவல் காலப்பகுதியில் ஊழியர்களுக்கான கொவிட் சிகிச்சை நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையத்தின் அறிமுக நிகழ்வில் குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனவிரட்ன, பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக்க அபேசிங்க (SLT), சந்திக விதாரண – பிரதம நிறைவேற்று அதிகாரி (மொபிடெல்) மற்றும் SLT-MOBITELஇன் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## AIA ஸ்ரீலங்காவின் தலைவராக டான் ஹக் லே உடன் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள பிரதான நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீர



2022 ஜூலை அமுலுக்கு வரும்வகையில் பணிப்பாளர் சபையின் (BOD) புதிய தலைவராக டான் ஹக் லேயின் நியமனத்தை AIA ஸ்ரீலங்கா அறிவித்திருந்தது. AIA குழும லிமிட்டெட் நிறுவனத்தின் பிராந்திய பிரதான நிறைவேற்று அதிகாரியான டான் ஹக் லே தாய்லாந்து, சிங்கப்பூர், புரூனே, மலேஷியா, கம்போடியா, மியன்மார் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் AIA இன் வியாபாரச் செயற்பாடுகளுக்குப் பொறுப்புவாய்ந்த அதிகாரியாகப் பணியாற்றுவதோடு தற்போது இதனை இலங்கையிலும் தொடரவுள்ளார். டான் ஹக் லே AIA குழுமத்தில் 11 வருட அனுபவத்தைப் பெற்றுள்ளதோடு ஆசியப் பிராந்தியத்தின் காப்புறுதித் துறையில் பரந்துபட்ட பிரிவுகளில் 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவத்தின் மூலம் தான் பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் மூலோபாய அனுபவம் ஆகியவற்றினை இலங்கைக்குகொண்டு வருகின்றார். இவர் ஹெரியட் வாட் பல்கலைக்கழகத்தில் (ஐக்கிய இராச்சியம்) பிரயோக கணிதம் மற்றும் புள்ளிவிபரவியல் இளமாணி (முதல் வகுப்பு மேதகைமை) பட்டத்தைப் பெற்றுள்ளதோடு இன்ஸ்டிடியூட் ஓவ் ஆக்சுவரீஸின் (ஐக்கிய இராச்சியம்) உறுப்பினராகவும் உள்ளார்.

டான் ஹக் லேவின் நியமனம் AIA ஸ்ரீலங்காவிற்கு கிடைத்த மிகப்பெரும் பாக்கியமாகும். மேலும் தற்போது இலங்கையில் நிலவும் மிகவும் சவாலான வியாபாரச் சூழலுக்கு மத்தியில் நிறுவனத்தையும் மற்றும் வியாபாரத்தையும் வெற்றிகரமாக வழிநடத்துவதற்கு இதன் மூலமாக மிகவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனைக்கு நித்தியகல்யாணி ஜூவலரியிடமிருந்து தாகம் தீர்க்கும் தண்ணீர்ப்பந்தல்



தங்க ஆபரண உலகில் கோலோச்சியுள்ள வெள்ளவத்தை நித்திய கல்யாணி ஜுவலரி தமது சமூகப் பணியை மேலும் விரிவுபடுத்தும் வகையில் கொழும்பு தெற்கு ரோட்டரி கழகத்துடன் இணைந்து கொழும்பு தெற்கு போதனா மருத்தவமனைக்கு (களுபோவில மருத்துவமனை) சுத்தமான குடிநீரை வழங்கும் தண்ணீர்ப்பந்தல் சேவையொன்றை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி முன்னின்று செயற்படுத்திய வெற்றிகரமான 12ஆவது குடிநீர்த்திட்டம் இதுவாகும். இந்நிகழ்வில் வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியும் கொழும்பு தெற்கு ரோட்டரி கழகத்தின் தலைவருமான ஏ.பீ.ஜெயராஜா, நித்தியகல்யாணி பணியாட்டொகுதி அங்கத்தவர்கள் மற்றும் கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனையின் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டார்கள்.

வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி நிறுவனம் பொது மக்களுக்கு சுத்தமான குடிநீரை இலவசமாக வழங்கும் தண்ணீர்ப்பந்தல் நிகழ்ச்சித்திட்டத்தை வெள்ளவத்தை காலி வீதியில் அமைந்துள்ள தமது காட்சியறைக்கு முன்னால் தண்ணீர்ப்பந்தலொன்றை அமைத்ததன் மூலமே தொடங்கி வைத்தது. காலி வீதியில் பயணிக்கும் மக்களின் தாகம் தீர்க்கும் உயரிய சிந்தனையுடன் தொடங்கப்பட்ட இச்சமூகப் பணி தற்பொழுது களுபோவில மருத்துவமனைக்கு வருகைதருகின்ற ஆயிரக்கணக்கான நோயாளர்களின் தாகம் தீர்ப்பது வரை விரிவாக்கப்பட்டுள்ளது.

## மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட் சிலாபத்தில் தனது கதவுகளைத் திறந்துள்ளது



இலங்கையின் முதன்மையான நிதிச் சேவை வழங்குனர்களில் ஒன்றான மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸ், நாடளாவிய ரீதியில் விரிவடைந்துவரும் தனது கிளை வலையமைப்பில் மற்றுமொரு புதிய கிளையை அண்மையில் சிலாபத்தில் திறந்துவைத்துள்ளது.

இலக்கம் 22, ஷேர்லி கொரியா மாவத்தை, சிலாபம் என்ற முகவரியில் அமைந்துள்ள இப்புதிய கிளை, வாடிக்கையாளர்களுக்கு நிறுவனத்தின் இலட்சியங்களைப் பிரதிபலிக்கும் வகையில் நவீன மற்றும் நன்கு வடிவமைக்கப்பட்ட இட வசதியை வழங்குகிறது. இப்பிராந்தியத்திலுள்ள வாடிக்கையாளர்கள் இப்போது மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸின் விரிவான நிதித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் வரிசையை சௌகரியமாகவும், மிகவும் வசதியாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

நிலையான வைப்புகள், தங்கக் கடன்கள் மற்றும் குத்தகை வசதிகள் ஆகியவையும் இதில் அடங்கும். மஹிந்திரா ஐடியல் பினான்ஸின் சிரேஷ்ட முகாமைத்துவ அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிரேஷ்ட அதிகாரிகள், மதிப்புமிக்க வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் நடைபெற்ற விசேட திறப்பு விழா நிகழ்வின் மத்தியில் புதிய கிளை உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

## பெருந்தோட்டம் சார்ந்த முகாமைத்துவ கருத்தரங்கு மூலம் வரலாற்றை உருவாக்கும் Hayleys Plantations




இலங்கை பெருந்தோட்டத் தொழில்துறை மற்றும் உள்ளூர் பெரு நிறுவனங்களுக்கான முதல் வகையான நிகழ்வாகக் கருதப்பட்ட ஹேலிஸ் பிளான்டேஷன்ஸ், அதன் ஆரம்ப முகாமைத்துவ கருத்தரங்கை நடத்தியது, இது வரலாற்று அண்மைக்கால சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில் அதன் தோட்டக் குழுக்களால் உருவாக்கப்பட்ட சக்திவாய்ந்த புதிய புத்தாக்கங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை காட்சிப்படுத்தியது.

இந்தக் கருத்தரங்கு கல்வித்துறை வட்டாரங்களில் உள்ள பொதுவான நடைமுறையாகும், இது Hayleys Plantation துறையின் மனிதவளப் பிரிவினால் 60 தோட்டங்கள் மற்றும் அதன் குழுக்கள் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தின் உச்சக்கட்டமாகும். ஆராய்ச்சி சார்ந்த அறிவியல் மனப்பான்மையை ஊக்குவித்து, உண்மையான அறிவியல் மற்றும் பொருளாதார முறைகளால் ஆதரிக்கப்படும் நிஜ உலக பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தரவு மற்றும் விதிமுறைகளை தொகுக்க குழுக்கள் பணிக்கப்பட்டன.

## CIPM ஸ்ரீலங்கா நிறுவனம் தமது முதலாவது சர்வதேச கல்வி நிலையத்தை பங்களாதேஷில் திறப்பு



இலங்கை தமது வரலாற்றில் எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள சூழலில் அதனோடு சேர்ந்து அந்நியச் செலாவணி நெருக்கடியும் ஏற்பட்டுள்ள இத் தருணத்தில் CIPM ஸ்ரீலங்கா நிறுவனம் தமது தேசிய கடமையை மிகச் சரியாக புரிந்துகொண்டு நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதற்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதோடு அதன் ஒரு நடவடிக்கையாக தமது முதலாவது சர்வதேச கல்வி நிலையத்தை பங்களாதேஷ் நாட்டில் ஆரம்பித்துள்ளது. இலங்கை மனிதவள முகாமைத்துவக் கல்வித்துறையில் முன்னோடியாகத் திகழும் CIPM ஸ்ரீலங்கா நிறுவனம் பங்களாதேஷ் நாட்டில் மனிதவள படையை வலுவூட்டுவதோடு அவர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற தொழில் தகைமைகளை பெறுவதற்கு மேற்படி சர்வதேச கல்வி நிலையத்தின் ஊடாக பல்வேறு கல்விச் சேவைகளை வழங்குவதற்கும் தயாராக உள்ளது.

மேற்படி புதிய கல்வி நிலையமானது, அந்நாட்டு மனிதவள முகாமைத்துவக் கல்வித்துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

## நெஸ்லே லங்கா விநியோக மையத்தின் பாதுகாப்புடனான செயற்பாடுகள் 4,000 நாட்கள் என்ற சாதனை இலக்கினை எட்டியுள்ளது



நெஸ்லே லங்கா விநியோக மையத்தின் பாதுகாப்புடனான செயல்பாடுகள், 4,000 நாட்கள் என்ற சாதனை இலக்கினை எட்டியுள்ளதுடன், நிறுவனம் தனது பணியாளர்கள் மற்றும் அவர்களின் பாதுகாப்பின் மீது கொண்டுள்ள வலுவான அர்ப்பணிப்பை இது மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது. குருநாகலில் அமைந்துள்ள மற்றும் அதன் விநியோக நிர்வாக ஏற்பாட்டுக் கூட்டாளரான EFL 3PL உடன் இணைந்து செயற்படும் நெஸ்லே லங்கா விநியோக மையத்தின் ஊழியர்கள் 150 க்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட ஒரு அணியாக உள்ளனர். மிகவும் நேசிக்கப்படும் நெஸ்லே தயாரிப்புகளை திறன்மிக்க வகையில் களஞ்சியப்படுத்தி, அவற்றின் போக்குவரத்தை உறுதிசெய்து, நாடளாவிய ரீதியில் உள்ள நுகர்வோர்களுக்கு அவை கிடைக்கும் வகையில் இவ்வணி சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

இந்த குறிப்பிடத்தக்க சாதனை இலக்கினை நினைவுகூரும் நிகழ்வு ஒன்று 2022 ஒகஸ்ட் 30 அன்று நெஸ்லே லங்காவின் விநியோக மையத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா, நெஸ்லே லங்கா முகாமைத்துவப் பணிப்பாளர் ஜேசன் அவன்சென்யா, நெஸ்லே லங்காவின் வழங்கல் சங்கிலிக்கான துணைத் தலைமை அதிகாரியான பஞ்சாட்சரம் சத்தியேந்திரா, EFL 3PL பிரதம நிறைவேற்று அதிகாரி சம்மி அக்பர், நெஸ்லே லங்கா மற்றும் EFL 3PL அணிகள் ஒன்றிணைந்து இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர். கடுமையான பாதுகாப்பு வழிகாட்டுதல்களை கடைப்பிடித்தவாறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

## தாய்–சேய் சார்ந்த சிகிச்சைகளையும் சேவைகளையும் கொண்ட தனித்துவமான 'மாபிய' திட்டம் லங்கா ஹொஸ்பிட்டல்ஸினால் அறிமுகம்



லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் 'மாபிய' (பெற்றோர்) எனும் பெயரில் தனித்துவமான தாய்-சேய் சிகிச்சை மற்றும் சேவைகள் அடங்கிய சிறப்பு திட்டமொன்றை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் பணியாட்டொகுதியினரும் நாட்டின் புகழ்பெற்ற மகப்பேற்றுத்துறை சிறப்பு மருத்துவர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். மேற்படி வர்த்தக நாம உருவாக்கத்தின் நோக்கமானது, லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் மருத்துவமனையில் தமது குழந்தை பிரசவத்தை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் பெற்றோருக்கு பரந்தளவிலான பெறுமதி சேர்த்த ஏராளமான சேவைகளை வழங்குவதாகும்.

'மாபிய' திட்டத்தின் கீழ் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் மருத்துவமனையின் பிரசவ சேவைகள், குழந்தைகள் சார்ந்த நோய்கள் மற்றும் கருத்தரித்தல் சிகிச்சை நிலையங்களின் சேவை பெறுநர்களுக்கு பல்வேறு அனுகூலங்களை வழங்குகின்றன.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சேவைகளில் வெளிநோயாளர் பிரிவு, கருத்தரித்தலுக்கு முன்னரும் பின்னருமான சிகிச்சையகச் சேவைகள், Ultrasound ஸ்கேன், குழந்தையின்மை மற்றும் இதர பிரச்சினைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான சிறப்பு வசதிகள் அடங்கும்.

அதற்கு மேலதிகமாக தாய்-சேய் பராமரிப்பு நிலையங்களில் புதிதாக பிறந்த குழந்தைகளை பரிசோதிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், போசாக்கு மதிப்பீடு, இயன்வியல், பாலூட்டல் முகாமைத்துவம், தடுப்பூசிகள் மற்றும் புதிதாக பிறந்த குழந்தைகளின் செவித்திறன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தேவையேற்படின், புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு தீவிர சிகிச்சை அளிப்பதற்கு நவீனமிக்கதும் உயர் வசதிகளும் கொண்டதுமான புதிய பிறப்பு சார்ந்த தீவிர சிகிச்சைப் பிரிவொன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

# மலையக மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு அரசின் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்

## திறந்த பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கம் கோரிக்கை

(செ.திவாகரன்)

இலங்கையில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு மூடை யூரியா 10 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், மலையகத்தில் மரக்கறி உற்பத்தி செய்யும் விவாசாயிகளுக்கு 29 ஆயிரம் ரூபாவிற்கு ஒரு மூடை யூயுரியா விற்பனை செய்யப்படுகிறது. இதனால் மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள். யூரியா வழங்குவதில் பாராபட்சம் காட்டாமல் மலையக மரக்கறி உற்பத்தியாளர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாவிற்கு யூரியா வழங்க வேண்டும் - என இலங்கை திறந்த பொருளாதார மத்திய நிலையங்கள் சங்கத்தின் தலைவரும் மரக்கறி உற்பத்தியாளருமான அருணசாந்த ஹெட்டியாராச்சி நுவரெலியா திறந்த பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் (24) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நம் நாட்டு மக்கள் மூன்று வேளையும் சோறு மட்டும் உண்பதில்லை, சோற்றுடன் மரக்கறிகளையும் உண்கிறார்கள் என்பதை நமது அரசாங்கம் மறந்துவிடக்கூடாது. மலையக மரக்கறிகளுக்கு பயன்படுத்தப்படும் உரம் வகைகள் மற்றும் மருந்து வகைகளும் அதிக



விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. மலையக விவசாயிகளுக்கு பெற்றோலும் மண்ணெண்ணெயும் கிடைப்பதில்லை.

நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பெற்றோலும் மண்ணெண்ணெயும் பேர்மிட் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. ஆனால், மலையக மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மண்ணெண்ணெயும் பெற்றோலும் கிடைக்காததால் தண்ணீர் பாய்ச்சும் இயந்திரத்தை இயக்க முடியாமல் மரக்கறிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் அவஸ்தைப்படுகின்றார்கள்.

மலையகத்தில் உற்பத்தி செய்யயப்படும் மரக்கறிகள் இலங்கை முழுவதும் கொண்டு செல்லப்படுகின்றன. மக்களும் மலையகத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளையே விரும்பி உண்கின்றார்கள். மரக்கறிகள் இறக்குமதி செய்வதில்லை. ஆனால், அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது. எனவே, உள்ளூரில் உற்பத்தி செய்யும் மரக்கறி உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மலையகத்தில் நுவரெலியா, கந்தப்பளை, நானுஓயா, இராகலை, பொரகஸ், வெலிமட, அக்கரப்பத்தனை உட்பட பல இடங்களில் அரசாங்கத் தொழிலைவிட மரக்கறி உற்பத்தித் தொழிலை பிரதான தொழிலாக செய்துவருகின்றனர். எதிர்காலத்தில் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. நெல் விவசாயி மற்றும் காய்கறி விவசாயி இருவரையும் பாதுகாப்பது அரசின் பொறுப்பும் கடமையுமென நம்புகிறோம் - என்றார்.

# ஆளுநரால் கதிர்காமம் பிரதேச சபை கலைப்பு

(பதுளை செய்தியாளர்)

கதிர்காமம் பிரதேச சபை கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவுமுதல் கலைக்கப்பட்டது.

இது குறித்து ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கதிர்காமம் பிரதேச சபையின் அதிகாரங்களைப் பிரயோகித்து பணிகளை மேற்கொள்ள மொனராகலை மாகாண உள்ளூர் ஆட்சி மன்ற ஆணையாளருக்கு குறித்த வர்த்தமானியூடாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் பிரதேச சபையின் தலைவர் உட்பட அதன் உறுப்பினர்கள் பல்வேறு மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் என்பது விசாரணையின்போது தெரியவந்ததையடுத்து, கதிர்காமம் பிரதேச சபை கலைக்கப்பட்டுள்ளதாக ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்தார்.

ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் கதிர்காமம் பிரதேச சபை ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி எச்.எம்.ஆர். அநுரகுமார தலைமையில் விசாரணைக்குழு ஒன்றை ஏற்படுத்தியிருந்தார். அக்குழுவின் அறிக்கைக்கமைய மேற்படி பிரதேச சபை கலைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாணவியர் மீது பாலியல் வல்லுறவு

## பெல்மதுளையில் ஆசிரியருக்கு விளக்கமறியல்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பெல்மதுளை பிரதேச பாடசாலையொன்றின் 12 வயதான இரண்டு மாணவிகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய ஆசிரியர் ஒருவரை எதிர்வரும் 04ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பெல்மதுளை நீதவான் நீதிமன்ற நீதவான் லுதினன் சிறிவர்தன உத்தரவிட்டார்.

இச்சம்பவம் குறித்து சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள் வழங்கிய தகவலையடுத்து சந்தேக நபரின் வாக்குமூலம் பெறப்பட்டபின் நேற்று முன்தினம் நீதிவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தேக நபர் ஆஜர்படுத்தப்பட்டார்.

மேற்படி இரண்டு மாணவிகளும் கடந்த ஏப்ரல் மாதம்முதல் பல முறை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக நீதவானிடம் விளக்கமளித்த விசாரணை நடத்திவரும் சிறுவர் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை சந்தேக நபரான ஆசிரியர் குறித்து கிடைத்து வருகின்ற ஏனைய முறைப்பாடுகள் குறித்தும் விசாரணைகளை நடத்திவருவதாக அதிகாரசபையின் விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கால்வாய்க்குள் இருந்து சிசுவின் சடலம் மீட்பு

(செ.தி.பெருமாள்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேஷன் வட்டகொட பகுதியிலுள்ள வடிகான் ஒன்றிலிருந்து நேற்று அதிகாலை 5.30 மணியளவில் நிறை மாத சிசு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியூடாக சென்ற சிலர் சிசுவை கண்டு பொலிஸாருக்குத் தகவலை வழங்கியுள்ளனர். பின்னர் சிசு லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில், குறித்த சிசு உயிருடன் இருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிசுவை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வதற்கான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வைத்தியசாலையின் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

சிசு தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய தாய் இனம் காணப்பட்டுள்ளார். குறித்த நபர் திருமணமாகாத 21 வயதுடைய பெண் ஆவார்.

இவர் வட்டகொடை கீழ்ப்பிரிவை வசிப்பிடமாகக்கொண்டவர் என்றும் சிகிச்சைகளுக்காக அவரை தற்போது லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் கொட்டகலை பிரதேச பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி சுதர்சன் தெரிவித்தார்.

# சுயதொழில் மேம்பாட்டுக்காக நிதி உதவி





(இக்பால் அலி)

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு வறிய தோட்டப் பிரதேச தாய்மார்களுக்கு சுயதொழில் மேம்பாட்டுக்காக நிதி உதவி வழங்கப்பட்டது.



பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் ஏற்பாட்டில் தெல்தோட்டை கலஹா தோட்டப் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய வறுமைக்கோட்டிலுள்ள தாய்மார்களுக்கு வாழ்வாதார நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் ஏற்பாட்டில் தெல்தோட்டை கலஹா தோட்டப் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய வறுமைக்கோட்டிலுள்ள தாய்மார்களுக்கு சுயதொழிலை மேம்படுத்தும் நோக்கில் நிதி உதவிகள் வழங்கும் வைபவம் கலஹா லயன்ஸ் கிளப் மண்டபத்தில் நடைபெற்றது.

பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் பொதுச் செயலாளர் பி.லோகேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தெல்தோட்டை பொலிஸ் நிலைய மகளிர் பிரிவுப் பொறுப்பதிகாரி திருமதி ரணசிங்க கலந்துகொண்டு சிறப்பித்தார்.

தெல்தோட்டை பிரதேச செயலகத்தின் மகளிர் பிரிவு பொறுப்பதிகாரி சுலோச்சனா, இளைஞர் விவகாரப் பொறுப்பதிகாரி சுதந்திர செல்வம், சமூக ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர் புவனேஸ்வரி, பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 71 குடும்பத் தாய்மார்களுக்கு சுயதொழில் மேம்பாட்டுக்காக நிதி உதவிகளும், வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் நாற்று விதைகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

# பதியுதீன் மஹ்மூத் கல்லூரியில் இடம்பெற்ற ‘ஆசிரியர் ஓர் இறைவணக்கம்’ நூல் வெளியீடு

(இக்பால் அலி)

ஸம் ஸம் பவுண்டேசனின் ஏற்பாட்டில் கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் நிர்வாகத்தின் ஒருங்கிணைப்புடன் அஷ்ஷெய்க் யூசுப் ஹனிபா (முப்தி) எழுதிய ‘ஆசிரியர் ஓர் இறைவணக்கம்’ என்ற நூலும் அதன் சிங்கள மொழிபெயர்ப்பான ‘இகன்வீம தஹம் சேவாவகி’ என்ற இரு நூல்களின் வெளியீட்டு விழா கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ஜீ.அமரசிறி பியதாச கலந்துகொண்டு சிறப்பித்தார்.







மத்திய மாகாண மேலதிக கல்விப் பணியாளர் ஏ.எல்.எம்.சாருடீன் நூல் மதிப்பீட்டுரையினையும், நூலாசிரியர் அஷ்ஷெய்க் யூசுப் ஹனிபா (முப்தி) வரவேற்புரையினையும், கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர் சிஹானா ரஹீம் வரவேற்புரையினையும் மற்றும் வாழ்த்துரையினையும் நிகழ்த்தினர்.

மல்வத்த விகாரையில் கடமையாற்றும் தொரகமுவ சத்தா திஸ்ஸ தேரரும் இதில் பங்கேற்றிருந்தார்.

இந்நிகழ்வில் சகலருக்கும் இலவசமாக இந்நூல்கள் வழங்கப்பட்டன. பெரு எண்ணிக்கையிலான பிரமுகர்கள் கலந்துகொண்டனர்





# சவூதி அரேபியாவின் 92ஆவது சுதந்திர தின நிகழ்வு கொழும்பில்!









(அஷ்ரப் ஏ சமத்)

சவுதி அரேபியாவின் 92ஆவது தேசிய சுதந்திர தினம் கடந்த 23ஆம் திகதி இரவு கொழும்பிலுள்ள சங்கில்லா ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் தூதுவர் கடிதத்தைப் பொறுப்பேற்ற காலித் ஹமவுட், நசார் அல்சான் அல்-ஹட்டானி தலைமையில் தேசிய சுதந்திர தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ, சுற்றாடல் அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட், சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல, பொதுபலசேனா தலைவர் கலகெட அத்தே ஞானசார தேரர், கொழும்பு கங்காராம விகாரையின் பிரதானி ஆகியோர் இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.







ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் முதுநபீன், ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் றிஸ்வி முப்தி, முஸ்லிம் தூதுவர்கள், முஸ்லிம் நாடுகளின் தூதுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அத்துடன், சவூதி தேசிய கீதம், சவூதி கலாசார நிகழ்வுகளும் திரை வழியாக காட்சிப்படுத்தப்பட்டன.

# பாடும் நிலா பாரைவிட்டு அகன்று ஈராண்டுகள் உருண்டோடிவிட்டன



'பாடும் நிலா' இப்பூமிபந்தை விட்டகன்று இரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

''இந்த தேகம் மறைந்தாலும் இசையாய் மலர்வேன்...'' என பாடியவர் மறைந்த பின்னணிப் பாடகர் பாடும் நிலா பாலு என அழைக்கப்படும் எஸ்பிபி எனும் எஸ்.பி.பாலசுப்ரமணியம். பாட்டுத்தலைவனாக சிகரம் தொட்டவர் எஸ்.பி.பாலசுப்ரமணியம். காலையில் சுப்ரபாதமாக, மாலையில் துள்ளல் டிஸ்கோ கீதங்களாக, இரவில் நிம்மதியாக உறங்க தாலாட்டுப் பாடலாக வீட்டுக்கு வீடு கேட்டுக்கொண்டே இருக்கும் பாலுவின் பாட்டு. கற்கண்டு குரலால் கோடிக்கணக்கான ரசிகர்களின் உயிரில் கலந்தவர்.

கொரோனா தொற்றுக்குள்ளாகி, கடந்த 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் 5ஆம் திகதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எஸ்.பி.பி. உடல்நிலை தேறிவந்த நிலையில், செப்டெம்பர் 25ஆம் திகதி காலமானார். அவர் மறைந்து நேற்றுடன் இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன.

இளமையான குரலைத் தேடிக்கொண்டிருந்த எம்.ஜி.ஆரிடம் இசையமைப்பாளர் கே.வி.மகாதேவன் எஸ்.பி.பியை அறிமுகப்படுத்த, கேட்டவுடனே பிடித்துப் போனது அவரது மெல்லிய மழைச்சாரல் போன்ற மயக்கும் குரல்.

எம்.ஜி.ஆரைத் தொடர்ந்து சிவாஜி, ஜெமினி கணேசன் உள்ளிட்ட அக்காலத்து நாயகர்கள் தங்கள் படங்களில் ஒரு பாடலாவது எஸ்.பி.பி. பாட வேண்டும் என்று விரும்பினர்.

ரஜினிகாந்த், கமல்ஹாசன் இருவருக்கும் எஸ்.பி.பியின் குரல் இலகுவாக பொருந்திப்போனது. இருவருக்குமான வேறுபாட்டையும் எஸ்.பி.பி. தமது குரலால் அடையாளப்படுத்தியது அவருடைய திறமைக்குச் சான்று.

விஜயகாந்த், சத்யராஜ், மோகன், பிரபு, கார்த்திக் ஆகியோர் நடித்த படப் பாடல்களில் எஸ்.பி.பி. கொடுத்த அழுத்தமும் உச்சரிப்பும் அவர் காட்டிய குரல் வித்தியாசமும் திரையுலகின் வரலாற்றில் பொன் எழுத்தால் பதிக்கப்படும்.

விஜய், அஜித், சூர்யா, அரவிந்தசாமி உள்ளிட்ட நடிகர்களுக்கும் எஸ்.பி.பியின் குரல் வெகுவாகப் பொருந்தியது ஆச்சரியத்திற்குரிய விடயம்.

அனைத்து இசையமைப்பாளர்களுக்கும் எஸ்.பி.பி. பாடியிருந்தாலும் இளையராஜா இசையில் ஆயிரக்கணக்கான பாடல்களுடன் எஸ்.பி.பியின் பங்களிப்பு மேலும் ஒரு புதிய சகாப்தமாக உருவானது. எஸ்.பி.பி. - இளையராஜா - எஸ்.ஜானகி கூட்டணியில் அமைந்த பாடல்கள், தமிழ்த் திரையிசை ரசிகர்களால் ஒருபோதும் மறக்க இயலாதவை.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தானே நடித்தும் இசையமைத்தும் புதிய சாதனைகளை நிகழ்த்தினார். நிழல்கள் படத்தில் இளையராஜாவுக்கே தனது குரலை தந்த அவர், தமது இசையில் வெளியான சிகரம் படத்தில் தமக்கு ஜேசுதாசை பாட வைத்த ரசிகராகவும் விளங்கினார்.

பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண் விருதுகளையும், 6 முறை தேசிய விருதுகளையும், மாநில அரசுகளின் விருதுகளையும் பெற்றவர் எஸ்.பி.பி. நான்கு பல்கலைக்கழகங்களால் டொக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட அவர், ஆந்திர அரசின் நந்தி விருதினை 25 முறை பெற்றுள்ளார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என்று ஏறத்தாழ 16 இந்திய மொழிகளில் 40,000இற்கும் மேற்பட்ட பாடல்களை பாடிய பெருமை மிக்கவர் எஸ்.பி.பி. ''இந்த தேகம் மறைந்தாலும் இசையாய் மலர்வேன்...'' என எஸ்.பி.பாலசுப்ரமணியம் பாடியிருந்தார். இந்த பாடல் வரி அவருக்கு மிகவும் பொருத்தமானதே. இவரது சாகாவரம் பெற்ற பாடல்கள், காற்றில் கலந்து உலகம் உள்ள வரை நிலைத்திருக்கும். இப்போதும் ஒவ்வொரு இரவிலும் அவரது குரலைக் கேட்டுவிட்டுத் தூங்கச் செல்வோர் பலர் உண்டு. நெஞ்சில் நிறைந்த கானங்கள் மூலம் எஸ்.பி.பி. இன்றும் ரசிகர்கள் மனங்களில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கிறார் என்றால் மிகையில்லை.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் என்பது ஒரு பெயர் மட்டுமல்ல - ஓர் உருவம் மட்டுமல்ல, ஈடு இணையில்லாத ஒரு தெய்வீகக் குரல். இவர் மறைந்தாலும் இவரின் குரல் என்றென்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

உலக செய்திகள்

## பொலிஸ் காவலில் இளம்பெண் உயிரிழந்த சம்பவம்

# போர்க்களமாகியது ஈரான்: 80 நகரங்களில் ஆர்ப்பாட்டம்

- 50 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்; ஆயிரக்கணக்கானோர் கைது
- ஐ.நா. எச்சரிக்கை; வெளிநாடுகளிலும் தீவிரமடையும் போராட்டம்

## தலைமுடியை வெட்டி – ஹிஜாப்பை தீயிட்டுக் கொளுத்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எதென்ஸ் பெண்கள்



ஈரானில் பொலிஸ் காவலில் அமினி என்ற இளம்பெண் உயிரிழந்ததைக் கண்டித்து, கிரீஸில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இரண்டு பெண்கள் தங்களின் தலைமுடியை வெட்டியும், ஹிஜாப்பை தீயிலிட்டு எரித்தும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, ஈரான் தலைநகர் உள்ளிட்ட 80 நகரங்களில் போராட்டம் பரவியுள்ள நிலையில், பொலிஸாரின் தடியடி மற்றும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி இதுவரை 50 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

**ஈரான் அரசுக்கு ஐ.நா. சபை எச்சரிக்கை**

மேலும் வெளிநாடுகளிலும் ஈரான் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன. ஐரோப்பிய நாடுகளில் செயற்படும் ஈரான் தூதரகங்களுக்கு முன்பாக பெண்கள் நூதனப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களுக்கு எதிராக இராணுவத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று ஈரான் அரசுக்கு ஐ.நா. சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், ஈரான் பெண்களுக்கு ஆதரவாக கிரீஸ் தலைநகர் எதென்ஸில் வாழும் ஈரானியர்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் இளைஞர் ஒருவரும், 2 இளம்பெண்களும் தலைமுடியை வெட்டியதோடு, ஹிஜாப்பையும் தீயிட்டு எரித்தனர்.



ஈரானின் குர்திஸ்தான் மாகாணம், சஹிஸ் நகரைச் சேர்ந்த மஹ்சா அமினி (வயது 22) என்பவர் கடந்த 13ஆம் திகதி தலைநகர் தெஹ்ரானிலுள்ள உறவினரைச் சந்திக்க சென்றபோது சிறப்புப் படை பொலிஸார், அமினியை வழிமறித்து அவர் முறையாக ஹிஜாப் அணியவில்லை என்று குற்றஞ்சாட்டினர். அவரை கைதுசெய்து வேனில் அழைத்துச் சென்றனர். பொலிஸ் காவலில் அவர் மிகக் கொடூரமாக தாக்கப்பட்டதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு கோமாநிலைக்குச் சென்ற நிலையில், அவர் கடந்த 16ஆம் திகதி உயிரிழந்தார்.

இதனைக் கண்டித்து தலைநகர் தெஹ்ரான் உள்ளிட்ட பல பகுதிகளில் போராட்டங்கள் வெடித்தன. போர்க்களமானது ஈரான்.

இரவில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தடுக்க மின் விநியோகம் நிறுத்தப்படுகிறது. தெஹ்ரான் உள்ளிட்ட நகரங்களில் இணைய சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. எனினும், எதற்கும் அஞ்சாமல் வீதிகளில் பொதுமக்கள் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் போராட்டம் இதுவரை ஈரானிலுள்ள 80 நகரங்களுக்கு பரவியுள்ளது. அந்த நகரங்களில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன. நாடு முழுவதும் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூடு, தடியடி தாக்குதலில் இதுவரை 50 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பாதிக்கும் மேற்பட்டோர் பெண்களாவர். பலர் காயமடைந்துள்ளனர். பொலிஸ் தரப்பிலும் சிலர் உயிரிழந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

போராட்டத்தைக் கட்டுப்படுத்த இதுவரை ஆயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டிருக்கிறது. முக்கிய நகரங்களில் பொதுமக்கள் வெளியில் நடமாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஹிஜாப் விவகாரத்தால் உயிரிழந்த மாஷா அமினி, குர்து இன பெண்ணாவார். அந்த நாட்டின் மக்கள் தொகையில் பேர்சிய இன மக்களுக்கு அடுத்து குர்து இன மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர். இதுவும் போராட்டம் வலுவடைய முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

## அரங்கத்தை அதிரவைத்த இந்தியா செய்த ரன்அவுட்
## அவ்விடத்திலேயே கண்கலங்கிய வீராங்கனை



இந்திய அணியின் வெற்றிக்காக தீப்தி ஷர்மா எடுத்த இங்கிலாந்தின் கடைசி விக்கெட் அரங்கத்தை அதிரவைக்கும்படியாக இருந்தது. இந்திய - இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. 39 பந்துகளில் 17 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், கடைசி ஒரு விக்கெட்டை வைத்துக்கொண்டு கடுமையான சூழலில் விளையாடிக்கொண்டிருந்த இங்கிலாந்து மகளிர் அணிக்கு இந்த விக்கெட் மறக்கமுடியாத ஒன்றாக அமைந்தது.

ஹர்மன்ப்ரீத் ஐடியா கொடுக்க, தீப்தி ஷர்மா அந்த கடைசி விக்கெட்டை கிரிக்கெட்டின் புதிய விதிகளைப் பயன்படுத்தி அசால்ட்டாக கைப்பற்றினார். 43ஆவது ஓவரில் தீப்தி ஷர்மா பந்துவீச, இங்கிலாந்தில் ஸ்ட்ரீக்கிங்கில் சார்லி டீனும் எதிர்த்திசையில் ஃப்ரேயா டேவிஸும் விளையாடிக்கொண்டிருந்தனர்.

தீப்தி ஷர்மா இந்த ஓவரின் நான்காவது பந்தை வீச ஓடிவந்தபோது அவர் பந்துவீசுவதற்குள் ஃப்ரேயா டேவிஸ் கிரீஸை தாண்டி பல அடிகள் நகர்ந்து சென்றுவிட்டார். இதை பயன்படுத்திக்கொண்ட தீப்தி, பந்தை வீசாமல் ஸ்டம்ப்பில் அடித்து டேவிஸை அவுட் செய்தார். நடுவர் ரீவியூ செய்தபிறகு புதிய கிரிக்கெட் விதிகளின்படி அவுட் கொடுக்கப்பட்டது. இதன்மூலம் இந்தியா கடைசி விக்கெட்டை வீழ்த்தி ஆட்டத்தில் வெற்றிபெற்றது. இதனால் சார்லி டீன் கண்கலங்கினார். டேவிஸ் அவருக்கு ஆறுதல் தெரிவித்து அரவணைத்தார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## பீபா உலகக்கிண்ண அதிகாரபூர்வ பாடல் வெளியீடு

*(ரமணி)*



கிராமி விருது பெற்ற அமெரிக்க ராப்பர் லில் பேபி 2022 FIFA உலகக் கிண்ணத்துக்கான அதிகாரப்பூர்வ பாடலான The World is yours to takeஐ வெளியிட்டார். இது போட்டியின் அனுசரணையாளர் பட்வைசருடன் இணைந்து தயாரிக்கப்பட்டது.

வான்ஜெலிஸ், என்னியோ மோரிகோன், பிளாசிடோ டொமிங்கோ மற்றும் ஷகிரா உள்ளிட்ட உலகக் கிண்ண இசைக்கலைஞர்களின் புகழ்பெற்ற பரம்பரையில் அவர் இணைகிறார். போட்டியின் முதல் அதிகாரப்பூர்வ ஒலிப்பதிவு எனக் கூறப்படும் பாடலில் இடம்பெறும் மூன்றாவது தனிப்பாடலானது, கால்பந்து மற்றும் இசையின் உலகளாவிய மொழிகளை இணைப்பதன் மூலம் கலைஞர்கள், ரசிகர்கள் மற்றும் வீரர்களை ஒன்றிணைத்து அவர்களின் ஆர்வத்தைப் பகிர்ந்துகொள்வதற்கான பீபா ஒலி மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும்.

"வெற்றிபெற்றவர்கள் வணங்கப்படும்போது தோற்றவர்கள் தோற்றுப்போகிறார்கள்." அது தொடர்கிறது.

இந்த டிராக் 1985ஆம் ஆண்டு வெளியான டியர்ஸ் ஃபார் ஃபியர்ஸ் ஹிட் எவ்ரிபடி வாண்ட்ஸ் டு ரூல் தி வேர்ல்ட் என்ற பாடலின் மாதிரிகள்.

சர் பொப் கெல்டாஃப்பின் 1986ஆம் ஆண்டு பஞ்ச நிவாரணத்திற்காக நிதி திரட்ட ஸ்போர்ட் எய்ட் பிரசாரத்தின் கருப்பொருளாக இதுவே எவ்ரிபடி வாண்ட்ஸ் டு ரன் தி வேர்ல்டுக்கு மாற்றியமைக்கப்பட்டது. கொங்கோ ராப்பர் கிம்ஸ் மற்றும் போர்ட்டோ ரிக்கோவைச் சேர்ந்த ஓசுனா மற்றும் ஆயிஷா, டேவிடோ மற்றும் டிரினிடாட் கார்டோனா ஆகியோரைக்கொண்ட ஒரு முறைசாரா வார்த்தையான அர்போவுக்குப் பிறகு லில் பேபியின் டிராக் இந்த ஆண்டு போட்டிக்காக வெளியிடப்படும் மூன்றாவது முறையாகும்.

போட்டியின்போது ரசிகர் பூங்காக்கள் மற்றும் மைதானங்களில் பாடல்கள் தொடர்ந்து ஒலிபரப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 2022ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டம் தெரிவு

*(சீனக்குடா நிருபர்)*



47ஆவது தேசிய விளையாட்டு விழாவுக்கு இணைவாக கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாண விளையாட்டு விழாவின் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டம் இம்முறை வெற்றிவாகை சூடிக்கொண்டது.

ஆரம்பநாள் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து போட்டிகளை ஆரம்பித்துவைத்தார். இதில் கிழக்கு மாகாணத்தின் பல சாதனைகள் புதுப்பிக்கப்பட்டன.



மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 200இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் இப்போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருந்தனர்.

அதன்படி சிறந்த சுவட்டு நிகழ்ச்சிக்கான வீராங்கனையாக எதிரிவீர (அம்பாறை), வீரராக நாசீக் (திருகோணமலை), சிறந்த மைதான நிகழ்ச்சிக்கான வீராங்கனையாக தனுஷ்கா (மட்டக்களப்பு), வீரராக ரதுஷன் (மட்டக்களப்பு) ஆகியோர் தெரிவானர்.

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவின் மிகச் சிறந்த மெய்வல்லுநர் நிகழ்ச்சியின் வீரராக ஈட்டி எறிதல் போட்டியில் கலந்துகொண்ட சு.ரதுஷான் வெற்றிவாகை சூடினார்.

பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் 2ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டமும் ஆண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் 2ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும் சம்பியனாக திருகோணமலை மாவட்டமும் தெரிவாகின.

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் 2ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டமும் தெரிவாகின.

வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளுக்கு கிழக்கு மாகாண கல்வி விளையாட்டு அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திஸாநாயக்க சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கேடயங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

## இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகம்



நிந்தவூர் சதாம் விளையாட்டுக் கழகம் நடத்தும் ரீ-10 கிரிக்கெட் சமரின் அரை இறுதிப் போட்டி அண்மையில் நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்திற்கும் கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 10 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பாடிய சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் 7.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 57 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதன்மூலம் நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகத்துடனான இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பை கல்முனை லெஜன்ஸ் அணி பெற்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக லெஜன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் முஹம்மட் முபாரிஸ் தெரிவானார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7